உ

சிவமயம்

சுப்பிரமணியப் பெருமான்

# விஸ்வரூப தரிசனம்



**வெளியீட்டு வழங்குவோர்**

கந்தபுராண கலாசாரமன்றம்,
இல. 35, மாரியம்மன் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
தொ.பே. இல: 0765690902

உ

சிவமயம்







சுப்பிரமணியப் பெருமான்

# விஸ்வரூப தரிசனம்

## (திருப்பெருவடிவம்)

# கந்த புராணம்


பதிப்பித்தது :

யாழ்ப்பாணம் இ.வை. பொன்னம்பலம் அவர்களால் பதிப்பித்தது.

(ஸ்ரீமுக வருடம் ஆனி மாதம் 12 தேதி

ஆனித் திருமஞ்சனம் (26.6.93)

வெளியீட்டு வழங்குவோர்

கந்தபுராண கலாசாரமன்றம்,

இல. 35, மாரியம்மன் வீதி, திருநெல்வேலி,

யாழ்ப்பாணம்.

தொ.பே. இல: 0765690902

மீள்பதிப்பு

சைவப் பிரகாசப் பதிப்பகம்

முருகன் துணை

# வெளியீட்டுரை

மிகப் பழங்காலம் தொட்டே யாழ்ப்பாணத்தில் கந்தபுராணக் கலாச்சாரம் நிலவிவந்தது. தற்போதைய காலத்தில் அதனை மீண்டும் பழமைபோல் வளரச் செய்ய வேண்டும் என்ற முனைப்புடன் மதிப்பிற்குரிய பண்டிதர் தி. பொன்னம்பலவானர் அவர்கள் தலைமையில் கந்தப்புராணக் கலாச்சாரமன்றை அமைத்து கந்தபுராணக் கலாச்சாரத்தை வளர்ப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறோம். அதில் முதலாவதாக ஆறுமுகநாவலரின் கந்தபுராண வசனநடை நூல் சைவபிரகாச பதிப்பகத்தினரின் முயற்சியால் இந்துகலாசார அமைச்சு சென்ற மாதம் நல்லூரில் வெளியிட்டு வைத்து அதனை மக்கள் ஆர்வத்துடன் வாங்கி படித்து வருகிறார்கள். இரண்டாவதாக கந்தப்புராணத்தில் முக்கியமாக முருகப்பெருமானின் விஸ்வரூப தரிசன முப்பத்திரண்டு பாடல்களையும் (கந்தபுராணம்) கருத்தெழுதி காரை இ.வை.பொன்னம்பலம் அவர்கள் 1993ஆம் ஆண்டு திருப்பெருவடிவம் என்னும் பெயரில் இந்நூலை வெளியிட்டிருந்தார். அவரது குலதெய்வம் காரைநகர் மருதடி வீரகத்தி விநாயகப்பெருமான். அவ்வாலயம் கந்தபுராணபடனம் நடைபெற்று வரும் ஆலயம் ஆகும். அங்கு பழைய காலத்தில் நல்லை நகர் நாவலரின் மருகர் ச.பொன்னம்பலபிள்ளை அவர்கள் வந்து கந்த புராணத்திற்கு பயன் சொல்லியதாக வரலாறு கூறுகின்றது. அவர் எழுதிய நூலில் பாடல்களில் வரும் மேலதிக விளக்கங்கள் பண்டிதர் தி.பொன்னம்பலவானர் அவர்கள் எழுதி சேர்த்ததோடு பின்னிணைப்பாக மக்களின் இக்கால தேவைக்கேற்ப நல்லை நகர் ஆறுமுகநாவலர் எழுதிய சிவப்புராண படன விதி, கச்சியப்ப சிவாச்சாரியார் வரலாறு ஆகியவற்றை இணைத்துள்ளோம். இந்நூலைப் படிப்பதனால் கந்தபுராணத்தைப் படிக்க வேண்டுமென்ற ஆவல் எழுவது இயல்பு. அந்த ஆவலை மேலும் வளர்க்க இந்நூல் பெரிய துணையாக அமையும். மற்றவர்கள் முருகனுடைய புகழைத் தெரிந்து பக்தியை வளர்த்துக்கொள்ள உதவியாக இருக்கும். இந்நூலை வெளியிடுவதற்கு அனுமதி தந்த இ.வை.பொன்னம்பலம் குடும்பத்தினருக்கும் இந்நூலை அச்சிட்டுத் தந்த ஸ்ரீமாருதி அச்சகத்தினருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**வே.சிவகுருநாதன்**

**ஆவணி ஏவிளம்பி 2017.** **செயலாளர், கந்தபுராண கலாச்சாரமன்றம்.**

உ

சிவமயம்

# சுப்பிரமணியப் பெருமானுடைய

# திருப்பெருவடிவம் (கந்த புராணம்)

## முன்னுரை

ஈழத்துச் சிதம்பரம் எனப்போற்றப்படும் யாழ்ப்பாணக் குடா நாட்டின் மேற்பாலுள்ள காரைநகர் என்னும் பதியில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் மருதடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் வருடா வருடம் கந்தபுராணம் முழுவதும் படிக்கப்பெற்று பயன் கூறப்பட்டு வருகின்றது. பயன் கூறுபவர்களுக்கெல்லாம் தலைமை தாங்கியவர் அமரர் சிவத்திரு ச.பஞ்சாட்சரக் குருக்கள் அவர்கள், பதினாறு வயதிலேயே அடியேனையும் அழைத்து கந்த புராணத்தைப் படிப்பதற்கு நெறிப்படுத்தி ஆர்வத்தைப் படிப்பதற்கு நெறிப்படுத்தி ஆர்வத்தை உண்டாக்கிய அப்பேராசிரியரின் நினைவாக இச்சிறுநூலில் என் அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய திருவருட்செல்வர் பரமசிவம் அவர்களின் துணைகொண்டு வெளியிடப்படுகின்றது.

இச்சிறு நூலுக்கு அணிந்துரை வழங்கிய செந்தமிழ்ச் செல்வர் ஐ. ஆனந்த நடராஜ தீக்ஷிதர் அவர்களுக்கும் பதிப்பாசிரியர் பரமசிவனார் அவர்களுக்கும் சிற்சபேசன் பேரருள் பாலிப்பாராக.

**இ.வை.பொன்னம்பலம்**

# பதிப்புரை

சிவபுராணங்களுள் சிறந்தது கடல் போன்ற ஸ்காந்தம், தமிழ்க் கந்தபுராணம் வடமொழி ஸ்காந்தத்தின் ஒரு பகுதியே ஆயினும் முதல்நூலை விடச் சாலச் சிறப்புடையது என்பது இரு நூலையும் ஆராய்ந்த அறிஞர்கள் கருத்தாகும். அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கையும் விளக்கி அவற்றைப் பெறும் வழியையும் சாதனத்தையும் காட்டுவது, பெரிய புராணத்தை ஒப்பச் சிவபெருமானது திருவருட் சிறப்பையும் கூறுவது தோத்திர நூல்களாகிய தேவாரம் திருவாசகங்களைப் போல் பொருள் இலக்கணத்திற்கு இலக்கியமாக ஆன்ம ஈடேற்ற முறையை ஒருங்கே கூறுவது சாத்திர நூலாகிய சிவஞான சித்தியாரைப் போல் சைவ சமய உண்மையைக் காட்டி புறச் சமயங்களைக் கண்டிப்பது ஆயினும் சிவோபாசனையின் பெருமையையும் சிவ நிந்தனையின் கொடுமையையும் உயிர்கள் முத்தி பெறும் முறைமையையும் விளக்குதலையே முதல் நோக்கமாகக் கொண்டுள்ளது.

இத்தகைய நூலுக்கு இதயம் போல் விளங்குவது சூரபன்மன் வதைப்படலம். 507 பாசுரங்களைக் கொண்ட அப்படலத்திலேயே சூரபன்மனுக்கு சுப்பிரமணியப் பெருமான் விசுவரூப தரிசனம் காட்டிய பாகம் (420 தொடக்கம் 451 வரையுள்ள பாசுரங்கள்) சாலச் சிறந்தது. இந்த முப்பத்திரண்டு பாசுரங்களையும் தினந்தோறும் பாராயணம் செய்யும் நியதி இங்கே தொன்று தொட்டு நிலவி வருகின்றது. அவ்வாறு பாராயணம் செய்வோர் அடைந்த பலன் அளவிடற்கரியது. இவ்வரிய பாக்களைத் தனியாக எடுத்து தெளிவான உரையோடு பதிப்பித்து வெளியிடப்படுகின்றது. இப்பாசுரங்களைத் தினந்தோறும் அன்போடும் ஆர்வத்தோடும் பாராயணம் செய்வோர் நோய் நீக்கம், செல்வம், சந்தான விருத்தி, சந்துருஜயம், அரசு வசியம் முதலிய பயன்களைத் தாம் தாம் வேண்டியவாறே பெறுவார்கள் என்பதில் சிறிதும் ஐயமில்லை. இது அநுபவத்தில் கண்ட உண்மை. முக்காலும்

உண்மை. காரைநகர் சௌந்தராம்பிகை சமேத சுந்தரேஸ்வரர் குட முழுக்கு விழா மலர் வெளியீட்டிற்கு எனது அன்பிற்குரிய சிவத்திரு க. வைத்தீஸ்வரக் குருக்களின் ஆணைப்படி செந்தமிழ் செல்வர் புலவர் டாக்டர் ஜ.ஆனந்த நடராஜதீட்சதர் மனமுவந்து அளித்த "தில்லைத் தலத்தின் தனிச் சிறப்பு" என்ற கட்டுரை இலங்கையில் நடைபெறும் உள்நாட்டு யுத்தத்தினால் குடமுழுக்கு நடைபெற முடியாமையால் மலரும் வெளிவரவில்லை. அவ்வரிய கட்டுரையை "சுப்பிரமணியபெருமானின் திருப்பெருவடிவம்" என்ற நூலொடு சேர்த்து வெளியிட அன்பர் பரமசிவம் இணங்கியுள்ளார். அவ்வாறே கட்டுரை ஆசிரியரும் இணக்கம் தெரிவித்துள்ளார். அவர்கள் அனைவரும் தில்லைக் கூத்தன் அருள் புரிவாராக.

# அணிந்துரை

இறைவன் எல்லோர்க்கும் அருள் புரிகின்றவன். எவரிடமும் வேற்றுமை காட்டாதவன். கருணை செய்வதில் அவனுக்கு நிகர் அவனே. அவன் முதல் நாளில் காட்டிய கருணையை எவ்விதக் காரணத்தாலும் குறைக்காமல் நாளுக்கு நாள் மிகுதியான கருணை காட்டக் கூடியவன் அவன் மட்டுமேயாம். இதை மணிவாசகர்,

"பேராது நின்ற பெருங் கருணைப் பேராறே" என்று கூறுவார். பகைவனுக்கும் அவன் அருள்பவன் என்பதைப் பல புராணங்கள் கூறும். அவற்றுள் சூரபன்மன் வதைப்படலம் முக்கியமானதாகும். சூரனுக்குக் குமாரக் கடவுள் விசுவரூப தரிசனம் காட்டிய பெருமை கூறும் 32 திருப்பாசுரங்களை நாள்தோறும் பாராயணம் செய்தால் நினைத்ததெல்லாம் கிடைக்கும். பாவமும் துயரமும் நீங்கிப் போகும் இவற்றைப் படிக்கத் தவஞ் செய்திருக்கவேண்டும். இந்த 32 பாசுரங்களுக்கும் உயர்திரு இ.வை. பொன்னம்பலம் உரையும் விளக்கமும் எழுதியுள்ளார்கள். இது பாராட்டுக்குரியது.

இந்நூலோடு நான் எழுதிய "தில்லைத் தலத்தின் தனிச் சிறப்பு" என்ற கட்டுரையையும் சிதம்பரம் இராமகிருஷ்ணா அச்சகத்தின் உரிமையாளர் உயர்திரு பரமசிவம் அவர்கள் வெளியிடுகின்றார்கள். நூல் உருவாக்கிய உயர் திரு . பொன்னம்பலம் அவர்களுக்கும் வெளியிடும் உயர்திரு பரமசிவம் அவர்களுக்கும் சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீமத் நடராஜப் பெருமான் எல்லா நலன்களும் உண்டாக அருள்புரியப் பிரார்த்திக்கின்றேன்.

**ஆனந்த.நடராஜ தீக்ஷிதர்**

உ
சிவமயம்

# சுப்பிரமணியப் பெருமானுடைய
# விஸ்வரூப தரிசனம்
## (கந்த புராணம்)

### காப்பு

திகட சக்கரச் செம்முக மைந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்
அகட சக்கர வின்மணி யாவுறை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்.

விளங்குகின்ற பத்துத் திருக்கைகளும் செம்மையான ஐந்து திருமுகங்களும் உடையவர் சிவபெருமான். அவரது தேருக்குச் சில்லாக இருந்தவன் தாமரைக்குத் தலைவனாகிய சூரியன். அச் சூரியன் வட்டமான ஒளிபொருந்திய இரத்தினமாக திருவயிற்றிலே இருக்கப்பெற்ற விகட சக்கர விநாயகரின் மெய்ஞ்ஞானமான திருவடிகளை வணங்குவாம்.

உடல்சின மோடு சூர னொருவனா யங்க ணின்றான்
அடல்வலி கொண்ட வாளி யந்தர நெறியான் மீண்டு
புடையுறு சரங்க ளோடு பொள்ளெனத் தூணி புக்க
சுடர்நெடுந் தனிவே லண்ண லவன்முக நோக்கிச் சொல்வான்.1

சூரனானவன் கோபத்தோடு தனித்தவனாய் அவ்விடத்தில் நின்றான். அழிக்கும் வன்மையைக் கொண்ட அம்புகள் ஆகாய வழியால் திரும்பி வந்து பக்கங்களிலுள்ள அம்புகளோடு குமாரக் கடவுளது தூணியிலே விரைவாகப் புகுந்திருந்தன. ஞான சக்தியான வேற்படையைத் தாங்கிய குமாரக் கடவுள் அவனுடைய முகத்தைப் பார்த்து பின்வருமாறு சொல்லியருளினார்.

உடல் சினமோடு :சூரன் குமாரக்கடவுளை சிறு பாலனென்றும் எளிதில் வெல்லலாம் என்றும் எண்ணி போர் செய்யத் துணிந்தான். முதலில் அவனுடைய சேனைகளை அழித்தார். பின் அவன் மாயா வடிவங்களை அழித்தார். அதனால் சூரனின் அதிகரித்த கோபம் உடல்சினம் எனப்பட்டது. அவன் மனத்தளர்ச்சியைக் காட்டுகிறது. மனத்தளர்ச்சியால் செருக்கும் அகந்தையும் தணியும். அவை தணிந்த சமயம் நல்லுபதேசத்துக்கு வாய்ப்பானதால்போலும்குமாரக்கடவுள்அவனோடு உரையாடுகிறார்.

வெம்புய லிடையிற் றோன்றி விளிந்திடு மின்னு வென்ன
இம்பரி லெமது முன்ன மெல்லையி லுருவங் கொண்டாய்
அம்பினி லவற்றை யெல்லா மட்டன மழிவி லாத
நம்பெரு வடிவங் கொள்வ நன்றுகண் டிடுதி யென்றான். 2

(சூரபன்மனே) விரும்பப்படுவதாகிய முகிலுக்கு இடையே தோன்றி அழியும் மின்னலைப்போல, இங்கு எமது முன்னிலையில் எண்ணில்லாத வடிவங்களைக் கொண்டாய். அவற்றையெல்லாம் அம்பினாலே கணப்பொழுதில் அழித்தோம். என்றும் உள்ளதாகிய நம்முடைய பெரிய வடிவத்தை நாம் கொள்ளுவோம். அதை நன்றாகப் பார்ப்பாயாக என்று குமாரக் கடவுள் சொல்லி அருளினார்.

வெம்புயலிடையில் : இயல்பாகவே அழியும் உன் மாய வடிவம் போலல்லாமல் என்றும் நிலையான வடிவத்தைக் காட்டுகிறோம் என்பது கருத்து.

சூரனின் முருகன் பாலன் என்ற எண்ணம் போய் பரமபதி என்ற எண்ணம் உண்டாக வாய்ப்பாக முருகன் திருப்பெரு வடிவைக் கொண்டருளினார்.

கூறிமற் றினைய தன்மை குரைகட லுலகந் திக்கு
மாறிலாப் புவன மண்டம் வானவ ருயிர்கள் யாவும்
ஆறுமா முகத்து வள்ளன் மேனியி லமைந்த தன்றி
வேறிலை யென்ன வாங்கோர் வியன்பெரு வடிவங் கொண்டான் 3

(தமது திருவடிவத்தைத் தரிசிக்குமாறு) இங்ஙனம் சொல்லி ஒலிக்கின்ற கடல்களும் நிலமும், திசைகளும் நிலைபெற்ற ஏனைய உலகங்களும் அண்டங்களும், தேவர்களும் ஏனைய உயிர்களும் மற்றெல்லாப் பொருள்களும், ஆறு திருமுகங்களையுடைய வள்ளலாகிய குமாரக் கடவுளது திருமேனியில் பொருந்தியனவே அன்றி, அதில் பொருந்தாத பொருள் ஒன்றுமில்லை என்று சொல்லும் வண்ணம், மிகப் பெரும் வடிவமொன்றை குமாரக் கடவுள் அங்கு கொண்டருளினார்.

உள்ளடி வரைகள் யாவு மொண்புற வடியி னீத்தம்
வள்ளுகிர் விரல்கண் முற்றும் வானுரு மேறு நாள்கோள்
எள்ளரும் பரடு தன்னி லிரும்புனற் கிறைவன் சோமன்
நள்ளிரு ளனைய மேனி நிருதியோ டரக்கர் நண்ண. 4

(அத்திரு வடிவத்திலே) பாதங்களின் நடுவில் சகல மலைகளும் அழகிய பாதங்களின் முற்பாகத்திலே கடல்களும், நெருங்கிய நகங்கள் பொருந்திய விரல்களில், ஆகாயத்திலே தோன்றும் இடியும் நட்சத்திரங்களும் சூரியன் முதலிய கிரகங்களும் இகழ்ச்சியில்லாத பரடுகளில் பெருமை பொருந்திய வருணனும் குபேரனும் பேரிருளையொத்த கரிய வடிவத்தினை யுடைய நிருதியும் இராக்கதரும் பொருந்த.

அடிதிரள் கணைக்கால் தன்னி லாரிடர் மணிகள் சானு
வடிவமை முழந்தாள் விஞ்சை வானவ ராதி யானோர்
தொடைதனின் மகவான் மைந்தன் றொடைமுத னடுவன் காலன்
கடிதடத் தசுரர் பக்கங் கடவுளர் யாரு நிற்ப 5

அடிதிரண்ட கணைக்கால்களில் முனிவர்களும், சிந்தாமணி முதலிய தேவ மணிகளும், சானுவின் வடிவமைந்த முழங்கால் களில், மேலோராகிய வித்தியாதரர் முதலியோரும் தொடை களிலே இந்திரனும் அவன் மகனாகிய சயந்தனும் தொடை

மூலத்தில் இயமனும், காலனும் அரையின் முற்பக்கத்தில் அசுரர்களும் விலாப்பக்கங்களிலே தேவர்களும் யாவரும் நிற்க.

தட்டையான மலை நுனி அல்லது மலைப் பாகம் சானு எனப்படும். முழந்தாள் தட்டை வடிவினதாய் மலை போலத் திண்ணியதாய் இருந்ததால் அதற்குச் சானு உவமையாயிற்று.

இருப்பினி னாகர் கோச வெல்லையின் மருந்தே யுந்திக்
கரும்படு முயிர்கண் மார்பிற் கலைகண்முந் நூலிற் போதம்
அருப்பயி லுரோமத் தண்ட மங்கையி லகில போகந்
திருப்பெருந் தடந்தோள் வைப்பிற் செங்கண்மால் விரிஞ்சன் மேவ
6

மூலாதாரத்தில் நாகர்களும் குறி நுனியில் அமிர்தமும் கொப்பூழில் கருவில் பொருந்தும் உயிர்களும் மார்பிலே சகல சாத்திரங்களும் உபவீதத்தில் ஞானமும், அரும்புகின்ற நுனி மயிரில் அண்டங்களும் உள்ளங்கையில் சகல போகப் பொருட்களும் அழகிய பெரிய அகன்ற தோள்களில் சிவந்த கண்களையுடைய விட்டுணுவும் பிரமாவும் இருக்க

மெல்லித ழனைய செங்கை விரன்மிசை யணங்கி னல்லார்
ஒல்லொளி யங்கி கண்ட மொப்பிலா மணிவாய் வேதம்
பல்லிடை யெழுத்து நாவிற் பரமவா கமத்தின் பேதம்
நல்லிதழ் மனுவின் விஞ்சை நாசியிற் பவனன் மன்ன 7

மெல்லிய இதழ்களையுடைய செங்கழுநீர்ப்பூவை ஒத்த சிவந்த கைவிரல்களில் அழகிய தெய்வப் பெண்களும், ஒலிக் கூட்டமும் அக்கினி பகவானும் கழுத்திலும், ஒப்பில்லாத அழகிய வாயிலே வேதங்களும், பற்களில் எழுத்துக்களும், நாக்கிலே சிவாகமங்கள் இருபத்தெட்டும், அழகிய உதடுகளில் மந்திரவகை (களாகிய சப்தகோடி) களும் மூக்கில் வாயுபகவானும் பொருந்த.

மனுவின் விஞ்சை : மந்திர வகைகள். நம - வஷட் - வௌஷட் - ஸ்வதா - ஸ்வாகா - பட் - உம்பட் என ஏழாகச் சொல்லப்படும். இவற்றையே ஏழு கோடிகள் என்பர்.

கருணைகொள் விழியிற் சோமன் கதிரவன் செவியிற் றிக்குத்
திருநுதற் குடிலை வைப்புச் சென்னியிற் பரம வான்மா
மரபினின் மேவித் தோன்ற மாறிலா திருக்குந் தொல்லை
ஒருதன துருவங் காட்டி நிற்றலு மும்பர் கண்டார். 8

*அருள் கொண்ட கண்களில் சந்திர சூரியரும், காதுகளில் திக்குக்களும் அழகிய நெற்றியிலே பிரணவமும், தலையில் சிவபெருமானும் முறைப்படி பொருந்தித் தோன்ற, என்றும் ஒரே தன்மையாய் உள்ள பழமையான ஒப்பற்ற தமது திருவடிவத்தைக் காட்டி நிற்க அதைத் தேவர்கள் கண்டார்கள்.*

செஞ்சுட ரநந்த கோடி செறிந்தொருங் குதித்த தென்ன
விஞ்சிய கதிர்கான் றுள்ள வியன்பெரு வடிவை நோக்கி
நெஞ்சகந் துளங்கி விண்ணோர் நின்றனர் நிமல மூர்த்தி
அஞ்சன்மி னஞ்சன் மின்னென் றருளின னமைத்த கையான் 9

*அநந்த கோடி சூரியர்கள் நெருங்கி நின்று ஒன்றாக உதயமானால் போல, ஒளிவீசும் சிறந்த பெரிய திருவுருவத்தினைப் பார்த்து தேவர்கள் மனம் கலங்கி நின்றார்கள். அப்பொழுது (இயல்பாகவே) பாசத்தடை இல்லாதவராகிய குமாரக் கடவுள் அபயக்கரத்தினராய் அஞ்சாதிருங்கள் என்று திருவருள் புரிந்தார்.*

*முருகவேள் திருப்பெரு வடிவம் எல்லையற்றதாயும் தாங்கு தற்கரிய ஒளியுடையதாயும் இருந்தமையால் தேவர்கள் அச்சம் மிகுந்து கலக்கமுற்றார்கள்.*

அண்டர்கள் யாரு மெந்தை யருண்முறை வினவி யுள்ளம்
உண்டிடு விதிர்ப்பு நீங்கி யுவகையாற் றொழுது நின்றார்
தண்டுளி வரைய தென்னத் தணப்பறச் சிதறு மூழிக்
கொண்டலின் றோற்ற நோக்கிக் குலவுறு மஞ்ஞையே போல் 10

*தேவர்கள் யாவரும் எமது பரமபிதாவாகிய குமாரக் கடவுளின் அருள் வாக்கைக்கேட்டு மனத்தை விழுங்கியதாகிய*

நடுக்கத்தின் நின்றும் விடுதலையாகி, மலைபோன்ற பெரிய குளிர்ந்த துளிகளை இடையறாது சொரியும் ஊழிக்காலத்து முகிலின் வரவைப் பார்த்துமகிழும் மயிலைப்போல், எல்லை யில்லாத மகிழ்ச்சியோடு தொழுது நின்றார்கள்.

**இறுதியு முதலு மில்லா விப்பெரு வடிவந் தன்னைக்**
**கறைவிட முறழுஞ் சூரன் கண்டுவிம் மிதத்தி னிற்ப**
**அறிவரு முணர்த றேற்றா வாறுமா முகத்து வள்ளல்**
**சிறிதுநல் லுணர்ச்சி நல்க வினையன செப்ப லுற்றான் 11**

அந்தமும் ஆதியும் இல்லாத இந்தப் பெரிய வடிவத்தை, கரிய ஆலகால விஷத்தை ஒத்த சூரன் கண்டு ஆச்சரியத்துடன் நிற்க, மெய்யறிவு உடையோரும் அறிதற்கரிய ஆறு திருமுகங்களை யுடைய அருள் வள்ளலாகிய குமாரக்கடவுள் அவனுக்குச் சிறிது நல்லுணர்ச்சியைக் கொடுத்தருள, இவ்வாறு சொல்லத் தொடங்கினான்.

சூரன் தவவலி உடையோனாதலால் அத்திரு வடிவத்தைக் கண்டபோது தேவர்களைப் போல் நடுங்காது நன்றாகப் பார்த்து அதன் பெருமையைக் கண்டு ஆச்சரியமடைந்தான்.

எம் போன்றவர் கடவுள் மிக மேலானவர் என்பதை அறிந்திருந்தும் அவரிலே மெய்யன்பு கொள்கிறோமில்லை. எங்கள் அன்பு போலி - ஏனென்றால் நாம் கடவுளை அடைய விரும்பாது உலகப் பொருள்களை அடைய விரும்புகின்றோம். இந்நிலை நீங்க மெய்யன்பைப் பெறவேண்டும். மெய்யன்பைப் பெற மெய்யறிவு இன்றியமையாதது. மெய்யறிவு உண்டானால் கடவுளே எமக்கு வேண்டிய மெய்ப்பொருள் என்பதும் உடம்பு முதலியன நிலையற்றன என்பதும் தெளிவாகும். இத்தகைய மெய்யறிவையே குமாரக்கடவுள் சூரனுக்குக் கொடுத்தருளினார்.

**எண்ணிலா வவுணர் தானை யாவையு மிமைப்பிற் செற்று**
**விண்ணுலா வண்டந் தோறும் வியன்சம ராற்றி யென்பால்**
**நண்ணினார் தம்மை யெல்லா நாமறித் தடிந்து வீட்டி**
**வண்ணமான் றேரு மீண்டு வராநெறி தடுத்தான் மன்னோ.12**

(இப்பாலகன்) கணக்கில்லாத அசுரசேனைகள் யாவற்றையும் இமைப்பொழுதிலே அழித்து ஆகாயத்திலே உலாவுகின்ற அண்டங்கள் தோறும் (வந்து வந்து என்னோடு) பெரிய போரைச் செய்து என்னைச் சேர்ந்த வீரர்களையெல்லாம் முற்றாக அழித்துத் தொலைத்து அழகிய இந்திர மா ஞாலத் தேரையும் மீண்டு என்னிடம் வராமல் தடுத்தான்.

சூரன் முதலில் குமாரக் கடவுளுடைய செயல்கள் அற்புத மானவை என்கின்றான். அமிர்தமந்தர மலையினால் இறந்த அனைவரும் உயிர்பெற்றபோது ஒரு கணப்பொழுதுள் அனைவரையும் சாம்பராக்கியமை தெய்வீகத் தன்மையும் மிகுந்த ஆற்றலுமுடைய சூரனுடைய இந்திரமாஞாலத் தேர் வலியைக் கெடுத்து சூரன் பால் செல்லவிடாது தடுத்தமை பிறரெவராலும் செய்ய இயலா அற்புதங்கள் என்பது சூரனின் அறிவும் அநுபவமு மாகும்.

**திண்டிற லுடையேன் றுாண்டுந் திறற்படை யாவு நீக்கிக்**
**கொண்டவென் மாய முற்றுங் கொடுஞ்சர மதனான் மாற்றி**
**அண்டமும் புவனம் யாவு மமரரும் பிறவுந் தன்பாற்**
**கண்டிடும் வடிவ மொன்று காட்டியென் கண்முனின்றான். 13**

மிகுந்த வலிமையுடையேனாகிய யான் செலுத்திய வலிய படைக்கலங்கள் யாவற்றையும் நீக்கி, நான் கொண்ட மாய வடிவங்களை எல்லாம் கொடிய அம்புகளால் மாற்றி, எல்லா அண்டங்களும் புவனங்களும் தேவர்களும் பிறபொருட்களும் தம்மிடத்தே தோன்றுகின்ற வடிவத்தைக் காட்டி என் கண்ணுக்கு முன்னே நிற்கின்றான்.

சூரனின் படைகளை நீக்குதலும் அவன் மாயாவடிவங்களை மாற்றுதலும் தேவர்கள் அசுரர்களால் ஆகாதவை. இப்படியான செயலை செய்ததுடன் சகல அண்டங்களும் புவனங்களும் உயிர்களும் அடங்கிய வடிவத்தைக் கொள்ளுதல் முருகப் பெருமானின் செயல் ஒன்றின் ஒன்று மேலானதாயிருப்பதைச் சூரன் கூறுகின்றான்.

கோலமா மஞ்ஞை தன்னிற் குலவிய குமரன் தன்னைப்
பாலனென் றிருந்தே னந்நாட் பரிசிவை யுணர்ந்தி லேன்யான்
மாலயன் றனக்கு மேனை வானவர் தமக்கும் யார்க்கும்
மூலகா ரணமாய் நின்ற மூர்த்தியிம் மூர்த்தி யன்றோ. 14

அழகிய மேலான மயில் வாகனத்தின் மீது விளங்கிய இந்தக் குமாரரை அந்நாட்களிலே பாலன் என்று எண்ணினேன். இத்தன்மைகளை அறிந்திலேன். திருமாலுக்கும் பிரமாவுக்கும் மற்றைத் தேவர்கட்கும் எவர்கட்கும் மூல காரணமாகிய கடவுள் இந்த மூர்த்தி அன்றோ?

குமாரக் கடவுளின் செயல்கள் மூலம் அவரே பரமபதி எனச் சூரன் அனுமானிக்கிறான். மூலகாரணமாவது உலகியக்கத்துக்குக் காரணமாயிருப்பவர்க்குக் காரணமாயிருத்தல்.

ஒன்றெனமுன்னம் வந்தோ னொருதனி வேலோன் றன்னைப்
பற்றிக லின்றி நின்ற பராபர முதல்வ னென்றே
சொற்றனன் சொற்ற வெல்லாந் துணிபெனக் கொண்டிலேனால்
இற்றையிப் பொழுதி லீச னிவனெனுந் தன்மைகண்டேன்.15

தூதுவனாக முன்னே வந்த வீரவாகு ஒப்பில்லாத வேலாயுதத்தைத் தாங்கிய இவரை, விருப்பு வெறுப்பு இல்லாத பராபர முதல்வன் என்று சொன்னான். அவன் சொல்லியவற்றை யெல்லாம் உறுதியெனக் கொண்டிலேன் ஆனால் இப்பொழுது இவரே யாவர்க்கும் தலைவர் என்ற தன்மையைக் கண்டு கொண்டேன்.

வேண்டியவற்றிலே விருப்பும் வேண்டியவற்றுக்கு மாறா யிருப்பவற்றிலே வெறுப்பும் மனிதர் முதலிய உயிர்கட்கு இயல்பா யுள்ளன. கடவுள் குறைவிலா நிறைவாய் இருத்தலால் அவருக்கு வேண்டியதொன்றும் இல்லை. வெறுப்பதற்கும் அவசியம் இல்லை என்பதையே பற்றிகல் இன்றிநின்ற பராபர முதல்வன் என்றார்.

மீயுயர் வடிவங் கொண்டு மேவிய தூதன் சொற்ற
வாய்மைகள் சரத மம்மா மற்றியான் பெற்ற வண்டம்
ஆயவை முழுது மற்று மறுமுகம் படைத்த செம்மல்
தூயபொற் பதரோ மத்திற் றோன்றியே நிற்கு மன்றே. 16

*மிக உயர்ந்த வடிவத்தைக்கொண்டு (நம்மிடத்து) வந்த அந்தத் தூதுவன் சொன்ன சொற்கள் உண்மையானவை. யான் பெற்றுக்கொண்ட அண்டங்கள் யாவும் ஆறுதிருமுகங்களை யுடைய தலைவரது தூய அழகிய திருவடியிலுள்ள ஒரு ரோமத்திலே தோன்றி நிற்கின்றன.*

*வீரவாகுதேவர் தூது சென்றபோது குமாரக் கடவுளுடைய பெருமையை நேராகவும் அவருடைய திருவடிவத்தின் மூலமாக வும் அவருடைய அடியவர்களின் மூலமாகவும் சூரபன்மன் அறியுமாறு விரித்துக் கூறினார். இவற்றுள் அவருடைய வடிவப் பெருமையை இது முதல் ஐந்து திரு விருத்தங்களில் சூரன் வியந்து கூறுகின்றான்.*

**அண்டர்கண் முனிவ ரேனோ ரகிலமிங் காட்டி யண்ணல்
கொண்டிடு படிவ முற்றுங் குறித்தியார் தெரிதற் பாலார்
எண்டரு விழிகள் யாக்கை யெங்கணும் படைத்தோர்க்கேனுங்
கண்டிட வநந்த கோடி கற்பமுங் கடக்கு மன்றே. 17**

*தேவர்களையும், முனிவர்களையும் பிறரையும் மற்றை யெல்லாப் பொருட்களையும் காட்டி, இப்பெருமான் கொண்ட வடிவம் முழுவதையும் குறித்து அறிய வல்லவர் யாவர் உடம்பெங்கும் பார்வையில் சிறந்த கண்களையுடையவர்களும், இதனைக்காண, அனந்த கோடி கற்ப காலத்திற்கு மேலே செல்லும்.*

*ஒரு கற்பமாவது ஆயிரம் சதுர் யுகம். ஒரு சதுர் யுகம் 4320000 ஆண்டுகளைக் கொண்டது. கடவுளின் பெருமையை இப்படிப் பலவாறாகச் சொல்லுதல் கடவுள் வழிபாடு செய்பவர்க்கு பெருந் துணையாகும். கடவுளை வழிபடும்போது அவருடைய பெருமை மனதிலே தெளிவாய் நிற்றல் வேண்டும். தோத்திரம் செபம் தியானம் முதலியவற்றைச் செய்யும்போது*

மனம் அவற்றிலே செல்ல கடவுளின் பெருமையை மறந்துவிடுதல்கூடும். அங்ஙனம் மறக்கப் பழகிவிட்டால் வழிபாடு முதலியன இயந்திரச் செயல் போலாகிப் பெரும் பயனைத்தாரா.

சீர்க்கும ரேசன் கொண்ட திருப்பெரு வடிவந் தன்னில்
ஏர்க்குறு மொளியுஞ் சீரு மிளமையு மெழிலு மெல்லாம்
ஆர்க்குள வுலகி லம்மா வற்புதத் தோடும் பல்காற்
பார்க்கினுந் தெவிட்டிற் றில்லை யின்னுமென்பார்வை தானும் 18

பெருமை பொருந்திய குமாரக் கடவுள் கொண்ட இந்த அழகிய பெரிய வடிவத்திலே சிறப்புக்கு அங்கமாகிய ஒளியும் சீரும் இளமையும் அழகும் ஆகிய இவைகள் எல்லாம் உலகில் யாவரிடத்துள்ளன. ஆகா! அற்புதத்தோடு பலமுறை பார்த்தாலும் இன்னும் என் கண்களுக்குத் தெவிட்டல் ஏற்படவில்லை.

உலகில் ஆர்க்குள என்பது எவ்வுலகில் யாருக்கு உள்ளது என்று பொருள்படும். அதாவது சிவலோகம் முதலிய உலகங்களுள் எதிலாயினும் எவருக்காயினும் உள்ளதன்று என்பதாகும். இவ் வடிவத்தைப் பார்க்கப் பார்க்க மேலும் மேலும் அழகு தோன்றுதலால் அதைப் பார்க்கும் ஆசை கூடுமேயன்றி குறையாது. ஆசை குறையாதாயின் தெவிட்டுதல் நிகழாது.

நேரில னாகி யீண்டே நின்றிடு முதல்வ னீடும்
பேருரு வதனை நோக்கிப் பெரிதுமச் சுறுவ தல்லால்
ஆரிது நின்று காண்பா ரமரரி ரழிவிலாத
சீரிய வரங்கொண் டுள்ளே னாதலிற் றெரிகின் றேனால். 19

ஒப்பில்லாதவராய் இவ்விடத்தில் நிற்கின்ற இவ்விறைவனுடைய நெடிய பெரிய உருவத்தைப் பார்த்து மிகவும் பயப்படுவ தன்றி, தேவருள்ளும் யாவர் இதை நின்று காணவல்லவர். அழிவற்ற சிறந்த வரத்தை யான் பெற்றுள்ளபடியால் நின்று காண்கின்றேன்.

சகல அண்டங்களும் அவற்றிலுள்ள சீவராசிகளும் அத் திருவடிவத்தில் அடங்கிநிற்றலால் அதை ஒத்த வேறொரு வடிவம் இருக்க இயலாது. ஆதலால் அது ஒப்பில்லாது எனப்பட்டது.

ஆயிர கோடி காம ரழகெலாந் திரண்டொன் றாகி
மேயின வெனினுஞ் செவ்வேள் விமலமாஞ் சரணந் தன்னில்
தூயநல் லெழிலுக் காற்றா தென்றிடி னினைய தொல்லோன்
மாயிரு வடிவிற் கெல்லா முவமையார் வகுக்க வல்லார். 20

ஆயிரம் கோடி மன்மதர்களுடைய அழகெல்லாம் சேர்ந்து ஒன்றாயினவாயினும் (அது) இக்குமாரக் கடவுளது நிர்மலமாகிய திருவடியின் தூய்மை பொருந்திய சிறந்த அழகுக்கு ஒப்பாதாயின், அநாதிப் பொருளாகிய குமாரக் கடவுளுடைய இந்தச் சிறந்த பெரிய வடிவத்திற்கு எல்லாம் உவமையாக யாவர் விரித்துச் சொல்ல வல்லவர்?

ஆயிரங்கோடி மன்மதர்களுடைய அழகுக்கும் முருகப் பெருமான் திருவடிகளின் அழகுக்கு இணையாகும் என்றாலும் அவ்வழகும் இவ்வழகும் தன்மையால் வேறுபாடு உண்டு. கள்ளிப்பால் பசுப்பால் போல் காணப்பட்டாலும் குணத்தினால் வேறுபட்ட தன்மையவேயாகும். அதுபோல மன்மதனுடைய அழகு மயக்கத்துக்கு ஏதுவானது. குமாரக் கடவுளுடைய திருவடி களோவென்றால் தூய்மையும் நன்மையும் உடையன. தூய்மை யாவது ஆன்மாக்களின் மலபந்தங்களை நீக்கிச் சுத்தராக்குதல். நன்மையாவது பேரின்பத்தைக் கொடுத்தல்.

சூரன் கண்கள் திருப்பெரு வடிவின் திருவடிகளேதான் சென்றுள்ளன. முன்னொரு பாடலில் தனக்குரிய அண்டங்களை முருகனின் பத ரோமம் ஒன்றின் நுனியிலே கண்டேன் என்றான். இப் பாடலிலும் திருப்பாத அழகையே கூறுகின்றான். அன்பர்கள் ஈசனுடைய திருவடிகளை அடைதலையே நோக்கமாயுடைய வராதலைக் கவனிக்குக.

இங்கென துயிர்போ லுற்ற விளவலு மிளைய சேயுஞ்
செங்கையில் வேலோன் றன்னைச் சிறுவனென் றெண்ணல் கண்டாய்
பங்கயன் முதலோர் காணாப் பரமனே யாகு மென்றார்
அங்கவர் மொழிந்த வாறுஞ் சரதனே யான தன்றே. 21

இவ்வுலகில் எனதுயிர்போன்ற தம்பியாகிய சிங்கமுகனும், இளைய மகனாகிய இரணியனும் அழகிய கையில் வேல் தாங்கிய திருக்குமாரரை சிறுவன் என்று எண்ணாதே அவர் பிரமா முதலி யோர் காணாத சிவபெருமானே ஆகும் என்று சொன்னார்கள். அவர்கள் சொல்லியதெல்லாம் உண்மையேனானது.

"பங்கயன் முதலோர் காணாப் பரமன்" என்ற விடயம் புராணங்களிலும் திருமுறைகளிலும் அதிகமாய்க் குறிக்கப் பெற்றிருக்கிறது. இதற்குக் காரணம் அவர்கள் தம் ஆற்றலைக் கொண்டு கடவுளைக் காணமுயன்ற அகந்தையையும் பேதைமை யையும் யாவரும் அறியவேண்டும் யாவரும் அறியவேண்டும் என்பது போலும்

அண்ணலார் குமரன் மேனி யடிமுதன் முடியின் காறும்
எண்ணிலா வூழி கால மெத்திற நோக்கி னாலுங்
கண்ணினா லடங்கா துன்னிற்கருத்தினா லடங்கா தென்பால்
நண்ணினா னமருக்கென்னை யருளென நாட்டலாமே. 22

பெருமையில் சிறந்த இக்குமாரக் கடவுளுடைய திருவுருவம் அடிமுதல் முடிவரையும் அளவில்லாத ஊழி காலம் எவ்விதமாகப் பார்த்தாலும் கண்ணுக்கு அடங்காது, நினைத்தால் மனத்திற்கு அடங்காது (இவ்வியல்புடைய இக் கடவுள்) என்னோடு போருக்கு எழுந்தருளியது என்பது என்மீது கொண்ட அருளென்றே நிச்சயிக்கலாம்.

இத் திருமேனியை உடையவர் இறைவரேயாவர். இவர் என்னை அழிக்கவேண்டுமாயின் என்னோடு போர் செய்தல் அவசியமன்று. இவருடைய புன்முறுவலினாலே கற்பாந்த காலத்தில் சகல அண்டங்களும் அழிகின்றன என்று இரணியன் கூறினான். ஆதலால் இவர் போருக்காக எழுந்தருளியது என்னைக்

கொல்லுவதற்கன்று. இவர் ஆன்மாக்களிடம் செல்வது அவர்கட்குப் பேரருள் செய்தற்காகவேயாம்.

திருகிய வெகுளி முற்றுந் தீர்ந்தன செருவி னூக்கம்
அருகிய துரோமம் புள்ளி யாயின விழியிற் றூநீர்
பெருகிய திவன்பா லன்பு பிறந்தன தமியேற் குள்ளம்
உருகிய தென்பு தானு முலைமெழு காகு மன்றே. 23

மனத்தை மாறுபடுத்திய கோபம் நீங்கின. போரில் ஊக்கம் குறைந்தது, உரோமங்கள் பொடித்தன, கண்களில் இன்பநீர் பெருகியது, தமியேற்கு இவரிடத்தே அன்பு உண்டானது, மனம் உருகியது என்புகளும் உலை முகத்து மெழுகு போல் உருகுகின்றன.

முருகனைச் சூரன் இறைவன் என ஏற்றது அவரது விசுவரூபக் காட்சியினால். மயிர் பொடித்தது, கண்ணீர் பெருகியது முதலிய அவர் அவனுக்கு அருளிய நல்லுணர்ச்சியினாலேயே.

எமது தாய் தந்தையருடைய இனிய பார்வையும் இனிய சொற்களும் சிற்சில வேளைகளில் எமது கண்களில் நீர் உண்டாகவும் மனம் உருகவும் செய்கின்றன. இறைவன் அன்புக்கு முன் அவர்கள் அன்பு சூரியனுக்கு முன் மின்மினி போல் குறைவானதேயாம். இறைவன் அன்பை உணரத்தக்க மெய்யறிவு பெற்றவர் மனமும் உடலும் உருகுதல் இயல்பேயாம்.

போயின வகந்தை போதம் புகுந்தன வலத்த தான
தூயதோர் தோளும் கண்ணுந் துடித்தன புவனமெங்கும்
மேயின பொருள்கண் முற்றும் வெளிப்படுகின்ற விண்ணோர்
நாயகன் வடிவங் கண்டே னற்றவப் பயனீ தன்றோ. 24

எனது செருக்கு நீங்கியது, மெய்யறிவு உண்டாயின, சிறந்த வலத்தோளும் வலக்கண்ணும் துடித்தன, எல்லா உலகங்களும் அவற்றிலுள்ள பொருள்கள் முழுவதும் தோன்றுவதற்கு இடமாகிய இத்தேவநாயகருடைய வடிவத்தைத் தரிசித்தேன். இது யான் செய்த அரிய தவத்தின் பயனன்றோ?

சூரன்வச்சிர யாக்கை - ஆயிரத்தெட்டு அண்ட அரசு - தேவர்களை வென்றமை என்பவற்றால் எல்லையற்ற சுகத்தை உடையவனாதல் இயல்பே. குமாரக் கடவுளின் திருப்பெரு வடிவத்தைக் கண்டதும் அவனது சிறுமை அவனுக்குத் தெரிந்தமையால் அகந்தை நீங்கியது ஆனால் பொதுவாக அனைவருக்கும் உள்ள அகந்தை நீங்கவில்லை என்பது வரும் பாடலால் தெரிகிறது.

நாயகன் வடிவம் கண்டேன் நற்றவப் பயன் ஈதன்றோ என்பதில் வரும் தவம் இப்பிறப்பின் அவன் செய்த யாகத்தைக் குறிக்காது. முற்பிறப்பில் அவன் முருகனுக்குத் தொண்டனாகத் தவம் செய்தான் என்னும் செய்தி உண்டு. அதனையே குறிப்பதாகக் கொள்ளவேண்டும். ஏனென்றால் தவத்தாலேயே ஞானமும் இறையருளும் கிடைக்கும் எனச் சாத்திரங்கள் கூறுகின்றன.

**சூழுதல் வேண்டுந் தாள்க டொழுதிடல் வேண்டு மங்கை**
**தாழுதல் வேண்டுஞ் சென்னி துதித்திடல் வேண்டுந் தாறு**
**ஆழுதல் வேண்டுந் தீமை யகன்றுநா னிவற்கா ளாகி**
**வாழுதல் வேண்டும் நெஞ்சந் தடுத்தது மான மொன்றே.** 25

என்னுடைய கால்கள் இக்கடவுளை வலம்வர நாடுகின்றன. சிறந்த கைகள் தொழுதலை நாடுகின்றன. தலை வணங்குதலை நாடுகின்றது, நாக்கு துதித்தலை நாடுகின்றது, தீமை முழுவதும் நீங்கி நான் இவர்க்கு அடிமையாய் வாழுதலை நாடுகின்றது, மானமொன்றே என் உள்ளத்தைத் தடுத்தது.

சூரன் முற்பிறவியில் நற்றவம் செய்து குமாரக்கடவுளிடத்தில் அன்புடையவனாய் இருந்தவன். கடவுளிடத்தில் வைக்கும் அன்பு அழிவற்றதாதலால் இந்நாள் வரை மறைந்திருந்து இப்போது வெளி வந்தது. குமாரக்கடவுளை வழிபட அங்கங்கள் விரும்பின. அப்போது அவன் மனம் மாறாய் நின்றது. தன் நா வீரனாய் நன்கு மதித்திருந்ததாலும் அவனுக்குப் பரம்பரை எதிரிகளான தேவர் பொருட்டு வந்திருப்பதாக நம்பியதாலும் அவன் மனம் முருகன் வழிபட மாறாய் நின்றது. முருகப் பெருமானின் முதல் நோக்கம் தன்னை ஆட்கொள்ளுதல்.

இரண்டாம் நோக்கம் தேவர்க்கு உதவுதல் என்பதை சூரன் மட்டுமல்ல தேவர்களும் அறியாதிருந்தனர். (தேவர்கள் பெற்ற நன்மையிலும் சூரன் அடைந்த நன்மை பெரிதென்பதை உணரும்போது முருகனின் முதலாவது நோக்கம் எது என்பது புரியும்)

ஒன்னலர் பொருட்டா லேகி யுறுசம ரிழைத்த செம்மல்
தன்னுரு வதனைக் காண்கின் முனிவதே தகுதி யாகும்
வன்னிகொள் வெண்ணெ யேபோல் வலியழிந் துருகிற் றென்றால்
என்னுடை வயத்த வன்றோ வுணர்ச்சியு மியாக்கை முற்றும் 26

பகைவர்களாகிய தேவர் பொருட்டு வந்து மிகுந்த போரைச் செய்த இக்கடவுளின் வடிவத்தைக் காணும்போது வெறுத்தலே எனக்குத் தகுதியாகும். நெருப்பில் பட்ட வெண்ணெயைப் போல் என்னுடைய மனமும் உடலும் முற்றாகத் திண்மை கெட்டு உருகின என்றால், இவைகள் என் வயப்பட்டு நிற்பதாகுமா?

சூரன் முருகனை சூழாமலும் தொழாமலும் தாழாமலும் துதியாமலும் உடலைத் தடுத்தானாயினும் தன் மனதை உருகாமல் தடுக்கமாட்டாதவனானான். புறக்கருவிகளைத் தடுத்தல் போல் அகக்கருவிகளைத் தடுத்தல் எளிதன்று (நெடுநாள் கள்ளுண்டவன் அது தீதென்றறிந்து குடிக்காமல் விட்டாலும் கள்ளைக் காணும் போது மனத்திலுண்டாகும் வேட்கையையும் உடற் கிளர்ச்சியை யும் தடுக்கமாட்டான்)

ஏடவி ழலங்கன் மார்ப னென்னுட னிந்நாள் காறும்
நீடிய விகற்போ ராற்றி நீங்கலா னின்ற தெல்லாம்
ஆடலி னியற்கை யென்றே யறிந்தன னஃதான் றன்னான்
சாடிய வேண்டு மென்னின் யாரது தாங்கற் பாலார். 27

இதழ்கள் அலர்ந்த பூக்களாலாய மாலையை அணிந்த மார்பையுடைய இப்பெருமான் இன்று வரையும் நீடித்த வலிய போரைச் செய்து பிரியாது நின்றதெல்லாம் இவருடைய திருவிளை யாடலின் தன்மையென்றே அறிந்தனன் அஃதன்றி அவர் என்னைக் கொல்ல வேண்டும் என்று கருதினால் யார் அதைத்தடுக்க வல்லவர்.

குமாரக் கடவுள் போருக்கெழுந்தருளியது தேவர்க்காக அன்று அருள்தற்காகவே என்ற எண்ணம் சூரனுக்கு உண்டாகின்றது. முன் அருள் என்றதை இப்போது ஆடலின் இயற்கை என்கின்றான். இறைவனின் ஐந்தொழில்களை விளையாட்டு என்னும் வழக்கு உண்டு. அம்பலத்து ஆடல் என்றும் காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி என்றும் உள்ளன. விளையாட்டாவது பயனை எதிர்பாராது செய்யும் செயல். கடவுள் தமக்கொரு பயனும் கருதாது ஐந்தொழில் புரிவர். அதேநேரம் எளிதாகவும் செய்வர். குமாரக்கடவுள் சூரனுக்கு பேரருள் புரிதற்காகவே செயற்பட்டதால் சூரன் ஆடலின் இயற்கை என்றே அறிந்தனன் என்றான்.

**ஏதமி லமரர் தம்மை யான்சிறை செய்த தெல்லாந்**
**தீதென வுரைத்தார் பல்லோ ரன்னதன் செயற்கை யாலே**
**வேதமு மயனு மேனை விண்ணவர் பலருங் காணா**
**நாதனிங் கணுகப் பெற்றே னன்றதே யான தன்றே. 28**

(நம்மிடத்து ஒரு) குற்றமும் செய்யாத தேவர்களை யான் சிறையில் வைத்ததெல்லாம் தீதென்று பலரும் சொன்னார்கள். ஆனால் அந்தச் செய்கையினாலேயே, வேதமும் பிரமாவும் மற்றைய தேவர்களும் காண்டற்கரிய இக்கடவுள் இங்கு எழுந்தருளி வரப்பெற்றேன். ஆகையால் இச்செயல் நல்லதாகவே ஆயிற்று.

சூரனுக்காயினும் சூரனைச் சார்ந்தவர்க்காயினும் தீமை செய்யாதவர்கள் தேவர் என்பதையே சூரன் ஏதமில் அமரர் என்றான்.

குமாரக் கடவுள் சூரனுக்கு திருப்பெருவடிவக் காட்சியையும் நல்லுணர்ச்சியையும் அருளியதற்குக் காரணம் தான் தேவரைச் சிறைசெய்தமையே எனத் தவறாகக் கருதியே தேவரைச் சிறை செய்ததால் இக்கடவுள் இங்கு எழுந்தருளப் பெற்றேன் என்கின்றான். உண்மையில் தேவரைச் சிறை செய்ததால் தன் தம்பியரையும் சுற்றத்தவரையும் இழந்து

துன்புற்றான். குமாரக் கடவுளுடைய தரிசனம் அவனுக்குக் கிடைத்தது அவன் முன் கூறியவாறு அவன் நற்றவப் பயனேயாம்.

ஒன்றொரு முதல் வனாகியுறைதரு மூர்த்தி முன்னம்
நின்றமர் செய்தே னிந்நா னெஞ்சினித் தளரே னம்மா
நன்றிதோர் பெருமை பெற்றேன் வீரனு நானே யானேன்
என்றுமிப் புகழே நிற்கு மிவ்வுடனிற்ப துண்டோ. 29

ஒரு தனி முதல்வராய் இருக்கின்ற இக்கடவுள் முன்பு நின்று இந்நாள் வரையும் போர் செய்தேன், இனி மனந்தளரேன், ஆகா! மேலான இந்த ஒரு பெருமையைப் பெற்றேன். வீரனும் நானே ஆகினேன். எக்காலமும் (அழிவின்றி) இந்தப் புகழே நிலைபெறும். இவ்வுடம்பு நிலை பெறுவதுண்டோ?

சூரனுக்குக் கிடைத்த நல்லுணர்ச்சி சிறிதே ஆதலால் அகந்தையால் உண்டாகும் மயக்கம் அவனை முற்றாக நீங்க வில்லை. நல்லுணர்ச்சி நிறையப் பெற்றவர்களே முற்றாக அகந்தை நீங்கப் பெறுவர். நற்செய்கையின் அறிகுறியாகப் புகழ் இருக்க வேண்டுமேயன்றி அகந்தையை மிகுவிப்பதாக புகழ் இருக்க லாகாது என்ற உண்மையைத் திருக்குறள் கூறியுள்ளது.

இப்பாடலில் வீரனும் நானேயானேன் என்பதற்குக் காரணமான அகந்தை நல்வழிப்பட்ட அகந்தையேயாகும். குமாரக் கடவுளுடைய பெருமையைக் கொண்டே தன்னைப் பெருமைப் படுத்த கருதுகின்றான்.

வானுளோர் சிறையை நீக்கி வள்ளலை வணங்கி யிந்த
ஊனுலா முயிரைப் போற்றி யளியர்போ லுறுவனென்னின்
ஆனதோ வெனக்கி தம்மா வாயிர கோடி யண்டம்
போனதோர் புகழும் வீரத் தன்மையும் பொன்றி டாவோ. 30

(யான்) தேவர்களுடைய சிறையை நீக்கி, அருள் வள்ளலாகிய குமாரக் கடவுளை வணங்கி, இந்த உடம்போடு கூடிய உயிரைக் காத்து, எளியவன் போல இருப்பேனாகில்

எனக்கு இது தக்கதோ ஆயிர கோடி அண்டங்களிலும் நிலவிய என் புகழும் வீரத் தன்மையும் அழிந்திடாவோ?

தேவர் சிறையை நீக்காமை புகழைப் பெற்றதாகக் கருது கிறான். புகழையும் வீரத்தையும் இழந்து துன்பமில்லாது உயிர் வாழ்தல் சிறப்பற்றது என்ற கருத்தையும் சூரன் இங்கு வலியுறுத்தி யுள்ளான்.

ஏன்னவித் தகைய பன்னி நிற்றலு மெவர்க்கு மேலோன்
உன்னருந் தகைத்தாய் நின்ற வொருபெருந் தோற்ற நீத்து
மின்னிவர் கலாப மூர்ந்த வியனுருக் கொண்டு நண்ணித்
துன்னலன் போத மாற்றித் தொன்மைபோ லாகச் செய்தான்.
31

என்று இவை போல்வனவற்றைச் சொல்லிச் சூரபன்மன் நிற்க, யாவர்க்கும் முதல்வராகிய குமாரக் கடவுள் நினைத்தற்கரிய பெருமையுடையதாய் நின்ற ஒப்பற்ற அப்பெரிய வடிவத்தை நீக்கி, ஒளியைப் பரப்புகின்ற மயில் வாகனத்தில் இவர்கருளிய பெருமை பொருந்திய திருநலத்தைக் கொண்டு நின்று பகைவனாகிய சூரனுக்குக் கொடுத்த மெய்யறிவை நீக்கிய பழைய நிலையை அடைய விட்டார்.

காரண னாகித் தானே கருணையா லெவையு நல்கி
ஆருயிர் முழுது மேவி யனைத்தையு மியற்றி நிற்கும்
பூரண முதல்வன் மைந்தன் போதக மளித்து மாற்றிச்
சூரனை மயக்கஞ் செய்யுஞ் சூழ்ச்சியோ வரிய தன்றே. 32

மூலகாரணராகி (உயிர்கள் மேற்கொண்ட) கருணை யினாலே அவைகட்கு வேண்டிய யாவற்றையும் கொடுத்து, அரிய உயிர்கள் யாவற்றுக்கும் உயிராய் அவற்றில் வியாபித்து ஐந்து தொழில்களை யும் செய்து நிற்கும் நிறைவுள்ள முதல்வராகிய சிவபெருமானின் திருமைந்தனாகிய குமாரக் கடவுள் அறிவைக் கொடுத்து பின் அதனை மாற்றி சூரபன்பனை மயங்க வைத்த சூழ்ச்சி அவர்க்கு அரிதன்றோ?

* — * — *

# தில்லைத் தலத்தின் தனிச்சிறப்பு

செந்தமிழ்ச் செல்வர், புலவர், டாக்டர்

**ஐ. ஆனந்தநடராஜ தீக்ஷிதர்**

எம்.ஏ., பி,ஓ.எல்., பி.எச்.டி.

இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை

அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர்

## கோயில்

கோயில் என்று பொதுப்படையாகக் கூறினால் சைவர் களுக்குச் சிதம்பரத்தையும், வைணவர்களுக்குத் திருவரங்கத்தை யும் குறிக்கும் என்பது சமய மரபு.

சங்க காலத்திற்கு முன்தொட்டே சிவன், திருமால் இருவருக்கும் கோயில் இருந்தது.

"பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்"
"நீலமேனி நெடியோன் கோயிலும்"

என்பர் இளங்கோஅடிகள். இவ்விரு பெருங்கடவுளரையும் ஒருசேர இணைத்து ஒரே இடத்தில் நின்று தரிசனம் செய்யத்தக்க அமைப்பைப் பெற்றிருப்பது சிதம்பரத் தலத்தின் தனிச்சிறப்பு.

சிதம்பரம் என்று சொன்னால்தான் இக்காலத்தில் புரியும். புலியூர் பெரும்பற்றப்புலியூர், வியாக்கிரபுரம், தில்லைவனம், பூலோக கைலாசம், புண்டரீகபுரம், பொன்னம்பலம் என்பன இதன் வேறு பெயர்கள். இவை உலக வழக்கில் இல்லை.

சிதம்பரத்தலம் சைவர்களுக்கு இதயத்தானம் போன்ற முதன்மையும், மேன்மையும், சிறப்பும் வாய்ந்தது. காரணம் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் மூன்றினாலும் மேன்மை பெற்று விளங்குவது இத்தலமேயாகும்.

## தில்லையின் சிறப்புகள்

உலகம் விராட்புருடனது வடிவம் என்று கொண்டால் திருவாரூர் அதன் மூலாதாரம் என்பர். திருவானைக்கா கொப்பூழ்

திருவண்ணாமலை, மணிபூரகம், திருக்காளத்தி கண்டம்; காசி புருவ மத்திமம்; சிதம்பரம் இருதயத் தானம். இத் தலக் கோயிலின் அமைப்பு பாராட்டுதற்குரியது. இதன் பரப்பளவு நாற்பது ஏக்கர். எனவே இது தமிழ் நாட்டிலுள்ள பெரிய கோயில்களுள் ஒன்றாக விளங்குகின்றது.

## உடலமே கோயில்

ஒவ்வொரு உடலிலும் யோகியர்களால் அறியப்படுவன மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை என்னும் ஆறு ஆதாரங்களாகும்.

இவ்வாறும் இக்கோயிலில் முறையே கர்ப்பக்கிருகம், அர்த்த மண்டபம், மகாமண்டபம், ஸ்நானமண்டபம், அலங்கார மண்டபம், சபா மண்டபம் என்ற பெயர்களால் அமைந்துள்ளன.

தில்லைத் திருக்கோயிலில் ஐந்து சபைகள் உள்ளன. அவை ஆனந்தத்தாண்டவம் புரியும் சித்சபை, கனகசபை, தேவசபை, ராசசபை, நிருத்தசபை என்பன.

சித்சபையும் கனகசபையும் சேர்ந்திருக்கின்றன. இவ்விடம் பொன்னம்பலம் எனப்படும்.

பொன்னம்பலத்தின் உச்சியில் ஒன்பது தங்கக் கலசங்கள் உள்ளன. இவ்வொன்பதும் ஒன்பது சக்திகளாகும். பொன்னம்பலத் திலுள்ள 64 கைம்மரங்களும் 64 கலைகளைக் குறிக்கும். தங்கத்தாலான 21,600 ஓடுகள் கூரையில் வேயப்பட்டுள்ளன. இவை ஒரு மனிதன் விடும் சுவாசங்களைக் குறிக்கும். இவ்வோடு களில் 72,000 ஆணிகள் பொருத்தப்பட்டுள்ளன. இவை மனிதனின் சுவாச சஞ்சார ஆதாரமான நாடிகளின் கணக்கை உணர்த்துவன.

ஒவ்வொரு பொன் ஓட்டிலும் "சிவாய நம" என்ற பஞ்சாட்சரம் எழுதப்பட்டுள்ளதாகத் "தில்லை உலா" கூறுகின்றது. மனிதனுடைய இருதயத்தில் இருக்கின்ற இறைவனே இப் பொன்னம்பலத்திலும் எழுந்தருளியுள்ளார்

என்பதை உணர்த்த மனித உடல் போலவே இவ்வம்பலம் அமைந் துள்ளது. காயமே கோயிலாக என்பர் பெரியோர். மனித உடலில் இதயம் உடல் நடுவில் இல்லாமல் இடப்புறம் தள்ளி இருப்பதைப் போலவே, கருவறை கோயில் மத்தியில் இல்லாமல் இடப்புறம் சற்றுத் தள்ளி அமைந்துள்ளது. இருதயத்தில் இரத்தம் நேராகச் செல்லாமல் பக்கங்களிலுள்ள குழாய் வழியாகச் செல்வது போல இத்திருக் கோயிலுள் புகும்வழிகளும் இரு பக்கங்களில் அமைந்துள்ளன.

கனகசபையில் அமைந்துள்ள 18 தூண்களும் பதினெண் புராணங்களைக் குறிப்பன. ஐந்து வெள்ளிப்படிகளும் பஞ்சாட்சர மந்திரத்தை உணர்த்துவன. வெள்ளிப் பலகணிகள் தொண்ணூற் றாறும் தொண்ணூற்றாறு தத்துவங்களைக் குறிக்கின்றன.

சித்சபையில் உள்ள ஐந்து தூண்களும் ஐம்பொறிகளைக் குறிப்பன. பிரம்ம பீடத்தில் அமைந்துள்ள 10 தூண்களில் கீழுள்ள ஆறு ஆறு சாத்திரங்களையும், நான்கு நான்கு வேதங்களையும் குறிப்பனவாகும். இவ்வாறு தத்துவப் பொருள் முழுவதும் அமையக் கட்டப்பட்டிருப்பது இக்கோயிலின் மற்றோர் தனிச் சிறப்பாகும்.

## வரலாற்றுப் பெருமைகள்

வானளாவித் திகழும் நான்கு இராச கோபுரங்களையும் அகன்றுயர்ந்த பிரம்மாண்டமான வாயில்களையும் உடைய இத் தில்லைப் பெருங்கோயிலுக்குச் சைவசமய குரவர் நால்வரும் வருகை தந்துள்ளனர். இப்பெரியார்கள் இங்கு வந்தருளியபோது மாணிக்கவாசகர் கிழக்குக் கோபுர வாசல் வழியாகவும், திருஞான சம்பந்தர் தெற்குக் கோபுர வாசல் வழியாகவும், திருநாவுக்கரசர் மேற்குக் கோபுர வாசல் வழியாகவும், சுந்தரர் வடக்கு கோபுர வாசல் வழியாகவும் உட்புகுந்து சபாநாயகரைத் தரிசித்துப் பதிகம் பாடினர்.

மாணிக்கவாசக சுவாமிகளும், மறைஞான சம்பந்தர், திருநாளைப்போவார், திருநீலகண்டர், உமாபதி சிவம் முதலிய சான்றோர்களும் முத்தி பெற்ற தலம் இது.

மூவர் முதலிகள் பாடிய தேவாரத் திருமுறைகள் இங்கு அவர்களின் கை முத்திரையுடன் அடக்கம் செய்யப்பட்டிருந்து, நம்பியாண்டார் நம்பியால் கண்டெடுக்கப்பட்டு அடைவு செய்யப் பெற்றன. இவற்றைக் காண உதவிய இராசராசன் திருமுறை கண்ட சோழன் என்றும் சிறப்புப் பெயர் பெற்றான்.

சேக்கிழார் பெருமான் "பெரிய புராணம்" பாடி அரங்கேற்றம் செய்து, யானை மீதமர்ந்து உலாவந்து அநபாய சோழனால் சிறப்பு செய்விக்கப் பெற்ற தலம் திருத்தில்லை.

கொற்றவன் குடியில் வாழ்ந்த உமாபதி சிவாச்சாரியாருக்குத் திருச்சிற்றம்பலமுடையவர் ஓர் திருமுக ஓலை எழுதி அனுப்ப அதன்படி அவர் பெத்தான் சாம்பனுக்குப் பேதமறத் தீக்கை செய்து முத்தியும் கொடுத்த முதன்மைத் தலம் தில்லை.

வியாக்கிரபாதர் வழிபடப்பெற்றதாலும், பதஞ்சலி முனிவர் தன் சீடர்களான கௌடபாதர் முதலியவர்களுக்கு வியாகரண சூத்திரம் விரிந்துரைத்ததாலும் சைவ சமயச்சாரியார் நால்வரால் பாடப்பெற்றமையாலும் திருமூலர், இராமலிங்க வள்ளலார் ஆகியோரது தொடர்புகளாலும் சிறப்புப் பெற்றது தில்லைப் பெருங்கோயில்.

சமயப் பூசல் அடியோடகலும் வண்ணம் திருமாலுக்கும் சிவனுக்கும் ஒரேயிடத்தில் அடுத்தடுத்துத் திருக்கோயில்கள் கண்டு மதப் பொதுமைக்கு எடுத்துக்காட்டாக விளங்கியது தில்லை.

அரனை வழிபட்ட தில்லை மூவாயிரவர் அரியையும் பூசை செய்து போற்றிய வரலாற்றுப் புகழ் இக்கோயிலுக்கு மட்டுமே உரியது. இதனை

மூவாயிர நான்மறையாளர்நாளும்
        முறையால் வணங்க அணங்காய சோதி
தேவாதி தேவன் திகழ்கின்ற தில்லைத்
        திருச்சித்ர கூடம்சென்று சேர்மின்களே

எனத் திருமங்கையாழ்வாரும்,

"தில்லைநகர்த் திருச் சித்ரகூடந் தன்னுள்
அந்தணர்கள் ஒருமூவாயிரவர் ஏத்த"

என்று குலசேகர ஆழ்வாரும் இதனைப் பாடியுள்ளமை குறிப்பிடத் தக்கது.

தமிழ்நாட்டுத் தலங்களுள் திருவாரூரும் தில்லையம்பலமும் மிகத் தொன்மையானவை. சிதம்பரத்தின் மூலத்தானம் மரக் கூரையாலானது என்பது உணரத்தக்கது. எல்லாக் கோயில்களிலும் இறைவன் எழுந்தருளியுள்ள இடத்தை - அதாவது கருவறையை மூலஸ்தானம் என வழங்குவர். ஆனால் சிதம்பரத்திலும் திருவாரூரிலும் சிவலிங்கம் பிரதிட்டை செய்யப்பட்ட தனியிடத்தையே திருமூலட்டானம் என வழங்குகின்றனர். இவை தொன்மை சுட்டும் சான்றுகள்.

சிதம்பரம் தமிழ்நாட்டின் வரலாற்றை அறியக்கூடிய முக்கியமான கல்வெட்டுக்களைக் காப்பாற்றி வந்துள்ளது. சோழப் பெருவேந்தனான இராசராசன் காலம் முதல், பல மன்னர்களின் ஆட்சிக் காலத்தில் அளிக்கப்பட்ட நிவந்தங்கள், திருப்பணிகள், தருமங்கள், கட்டளைகள், வழக்குகள், தீர்ப்புகள் ஆகியவை பற்றிய வரலாற்றுச் செய்திகள் இவற்றால் அறியப்படுகின்றன.

கவியரசர் கம்பர் தமது இராம காதையை அரங்கேற்றியது ஆயிரக்கால் மண்டபத்தில் என்பர் இலக்கிய ஆய்வாளர்.

ஆங்கிலத் துருப்புகளின் தாக்குதலை எதிர்த்து ஹைதர் அலிக்குப் பல ஆண்டுகள் கோட்டையாக இருந்து பாதுகாப்பளித்தது இத்திருக்கோயிலே என வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றனர்.

இறைவன் அருவம், உருவம், அருவுருவம் என்னும் மூன்று திருமேனிகளாக இத்தலம் ஒன்றில்தான் எழுந்தருளி உள்ளான்.

நித்திய உற்சவர் - உருவம்
ஸ்படிகலிங்கம் - அருவுருவம்

சிதம்பர ரகசியம் - அருவம்

கூத்தப்பெருமானது வலப்பக்கத்தில் சிதம்பர ரகசியம் ஆகாயலிங்கம் மந்திர உருவமாகத் திருவம்பலச் சக்கரத்துடன் அடைக்கப்பட்டுள்ளது. தங்க வில்வமாலை திருவம்பலச் சக்கரத்தின் முன்னே தொங்கவிடப்பட்டுள்ளது. இது திருவாசியுடன் இணைந்துள்ளது. நடராசப் பெருமானின் முன்னிலையில் ஸ்ரீ இரத்தின சபாபதியும் ஸ்ரீ ஸ்படிகலிங்கமும் இடது பக்கத்தில் சுவர்ணகால பைரவரும், ஸ்ரீ நித்ய உத்சவரும் உள்ளனர்.

பாரத நாட்டில் வேறு எக்கோயிலிலும் காணப்படாத தனிச் சிறப்பு இது.

எல்லாவற்றிற்கும் மேலான ஒரு தனிப் பெருமை இக் கோயிலுக்கு உண்டு. 300 தீட்சதர்கள் இக்கோயிலுக்குப் பூசை செய்கின்றனர். கோயிலுக்கு ஒரு குழி நிலம் கூடக் கிடையாது. அவ்வாறிருந்தும் நாள்தோறும் தவறாமல் ஆறுகாலப் பூசைகளும், தனிப்பட்ட அர்ச்சனைகளும் நடக்கின்றன. ஆண்டொன்றுக்கு இருபெரும் விழாக்கள் பெருஞ்சிறப்புடன் நடக்கின்றன. வருவாய் இல்லாத கோயிலில் இவ்வளவு சிறப்பாக இவை நடைபெற்று வருவது அதிசயிக்கத் தக்கதோர் சிறப்பு!

இலக்கியப் பெருமையும் புராணச் சிறப்பு வரலாற்று முதன்மையும், கலைப் பெருக்கமும் கருணை வண்மையும், மூர்த்தி கரமும் வாய்ந்த தில்லைச் சிதம்பரம் தமிழகத்தின் இதயக்கனியாகத் திகழ்வதில் வியப்பொன்றுமில்லை.

திருச்சிற்றம்பலம்

அன்னம் பாலிக்கும் தில்லைச்சிற் றம்பலம்
பொன்னம் பாலிக்கு மேலுமிப் பூமிசை
என்னம் பாலிக்கு மாறுகண் டின்புற
இன்னம் பாலிக்கு மோவிப் பிறவியே!

- அப்பர் தேவாரம்

உ
கணபதி துணை

# சிவபுராண படன விதி

நால்வகை யோனிகளுள் ஒரு யோனிவாய்ப்பட்டுப் பிறப்பவை யாவை அவையெல்லாம் பசுக்கள், அப்படிப் பிறத்தலில்லாதது யாது அது பதிப்பொருள் என்னும் இதுவொன்றே எளிதில் அவ்விரண்டுக்கும் தம்முள் வேற்றுமை அறியும்வண்ணம் நிற்பது. ஆதலால், வேதம் புராணம் இதிகாசம் முதலிய நூல்களிலே மற்றைத் தேவர்களெல்லாம் அப்படிப் பிறந்திறத்தல் சொல்லப்படுதலாலும், சிவபெருமானுக்கு அது உண்டென்பது எங்காயினும் சொல்லப்படாமையாலும், அநாதிமுத்த சித்துருவாகிய முழுமுதற் கடவுள் சிவபெருமானே என்பது தெள்ளிதிற்றுணியப்படும்.

### சிவஞானசித்தியார்

யாதொரு தெய்வங்கொண்டீ ரத்தெய்வ மாகி யாங்கே
மாதொரு பாக னார்தாம் வருவர்மற் றத்தெய் வங்கள்
வேதனைப் படுமி றக்கும் பிறக்குமேல் வினையுஞ் செய்யு
மாதலா லிவையி லாதா னறிந்தருள் செய்வ னன்றே.

### அருணகிரியந்தாதி

எல்லார் பிறப்பு மிறப்புமியற் பாவலர்தஞ்
சொல்லாற் றெளிந்தேநஞ் சோணேச - ரில்லிற்
பிறந்தகதை யுங்கேளேம் பேருலகில் வாழ்ந்துண்
டிறந்தகதை யுங்கேட்டி லேம்.

2. இப்படித் துணியப்படும் முன்னைப்பழம் பொருட்கும் முன்னைப் பழம்பொருளாகிய சிவபெருமானை வேதசிவாகம விதிப்படி மெய்யன்போடு வழிபடுவோர் சைவசமயிகள் என்றும், சிவனடியார்கள் என்றும் சொல்லப்படுவர்கள். இச் சைவர்கள் பல சமயத்தாருக்கும் பொதுவகையால் வேண்டப்படும் இலக்கணங்களை முன்னே வழுவாது தழுவிக்கொண்டே பின்பு

தங்களுக்குச் சிறப்பு வகையால் வேண்டப்படும் இலக்கணங் களை உடையர்களாய் ஒழுகல்வேண்டும்.

3. பொதுவிலக்கணங்களாவன : கொல்லாமை, புலாலுண் ணாமை, கள்ளாமை, கள்ளுண்ணாமை, பிறர்மனை நயவாமை, வரைவின்மகளிர் நயவாமை, இரக்கம், வாய்மை, பொறை, அடக்கம், கொடை, தாய் தந்தை முதலிய பெரியோரை வழிபடுதல் முதலிய நன்மைகளாம். இந்நன்மைகளில்லாத கிரியை ஞானங்கள் சிறிதும் பயன்படாவாம்.

## பட்டணத்துப்பிள்ளையார் பாடல்

கொல்லாமற் கொன்றதைத் தின்னாமற் குத்திரங் கோள்களவு
கல்லாமற் கைதவ ரோடிணங் காமற் கனவினும்பொய்
சொல்லாமற் சொற்களைக் கேளமாற் றேகையர் மாயையிலே
செல்லாமற் செல்வந் தருவாய் சிதம்பர தேசிகனே.

## சிவஞானதீபம்

கொலையாதி நெறியகன்ற ஞானந் தானே
கூறரிய மேலான ஞான மாகுங்
கொலையாதி யகன்றொழுகுந் தவங்க டாமே
குற்றமிலா நற்றவமென் றுரைக்கு நூலுங்
கொலையாதி யகற்றியநல் லறங்க டாமே
குவலயத்தி லொப்பரிய வறங்க ளாகுங்
கொலையாதி யகன்றுபெறுஞ் செல்வந் தானே
கூறினுயிர்க் கிதமான வாழ்வ தாமே.

எவ்வுயிரும் பராபரன்சந் நிதிய தாகு
மிலங்குமுயி ருடலனைத்து மீசன்கோயி
லெவ்வுயிரு மெம்முயிர்போ லென்று நோக்கி
யிரங்காது கொன்றருந்து மிழிவி னோரை
வவ்வியமன் றூதருந் தண்டஞ் செய்து
வல்லிரும்பை யுருக்கியவர் வாயில் வார்த்து
வெவ்வியதீ யெழுநரகில் வீழ்த்தி மாறா
வேதனைசெய் திடுவரென வோது நூலே.

## பதிபசுபாசவிளக்கம்

அம்மா வெனவலற வாருயிரைக் கொன்றருந்தி
யிம்மா னுடரெல்லா மின்புற் றிருக்கின்றா
ரம்மா வெனுஞ்சத்தங் கேட்டகன்ற மாதவர்க்கும்
பொய்ம்மா நிரயமென்றாற் புசித்தவர்க்கென் சொல்லுவதே.

கங்கையிற் படிந்திட் டாலுங் கடவுளைப் பூசித் தாலு
மங்குல்போற் கோடி தானம் வள்ளலாய் வழங்கி னாலுஞ்
சங்கையி லாத ஞான தத்துவ முணர்ந்திட் டாலும்
பொங்குறு புலால்பு சிப்போன் போய்நர கடைவ னன்றே.

கொலையிலா னுதவு மன்னங் கூறி ற்பே ரமுத மாகுங்
கொலையுளா னுதவு மன்னங் கூறி ற்பேர் விடமதாகும்
புலையர்த மனையி னுண்போன் புலையனா மாறு போலக்
கொலைஞர்த மனையி லுண்போன் கொலைஞனே யாவ னன்றே.

கலையெலா முணர்ந்தா னேனுங் கரிசறத் தெளிந்தா னேனு
மலையென வுயர்ந்தா னேனு மனமய லகன்றா னேனு
முலகெலாம் புகழப் பல்லோர்க் குதவிய கையனேனு
மிலகிய விரக்க மின்றே லெழுநர கடைவ னன்றே.

## கூர்மபுராணம்

கள்விலை பகர்வோர் கள்ளினை நுகர்ந்தோர் கள்ளருந் துதற்குடன்
[படுவோர்
கள்ளருந் துநரை மகிழுநர் நரகிற் கற்பகா லங்கிடந் தழுந்தி
யெள்ளுறுந் தீய மலப்புழு வாகி மலத்தினை நுகர்ந்துபின் னிறந்து
விள்ளருங் கொடிய ரௌரவ நரகின் மீட்டுமீட் டுழந்துநாள்
[கழிப்பார்.

## திருவிளையாடற்புராணம்

காமமே கொலைகட் கெல்லாங் காரணங் கண்ணோ டாத
காமமே களவுக் கெல்லாங் காரணங் கூற்ற மஞ்சுங்
காமமே கள்ளுண் டற்குங் காரண மாதலாலே
காமமே நரக பூமி காணியாக் கொடுப்ப தென்றான்.

4. சிறப்பிலக்கணங்கள் : புறத்திலக்கணம், உடலிலக்கணம், அகத்திலக்கணம் என மூவகைப்படும். அவற்றுள், புறத்திலக்கணம் பத்து; உடலிலக்கணம் பத்து; அகத்திலக்கணம் மூன்று. ஆகச் சிவனடியாரிலக்கணம் இருபத்து மூன்று.

**உபதேசகாண்டம்**

செய்ய மேனிச் சிவனடி யார்க்கய
லெய்தக் காணு மிலக்கணம் பத்துள
மெய்யி லெய்து மிலக்கண மெய்மைசா
லையி ரண்டகத் துள்ளன மூன்றரோ.

அலக்க ணீக்கு மரனடி யார்க்கென
விலக்க ணங்க ளிருபத்து மூன்றுள
பலப்ப டுத்து முதற்படு பத்தையும்
புலப்ப டுத்தி நுமக்குப் புகலுவாம்.

6. புறத்திலக்கணம் பத்தாவன : விபூதி உருத்திராக்ஷம் என்னுஞ் சிவசின்னங்களைத் தரித்தல், குருவை வழிபடல், சிவபெருமானைத் தோத்திரஞ் செய்தல், சிவநாமங்களை உச்சரித்தல், சிவபெரு மானைப் பூசைசெய்தல், சிவதருமங்களைச் செய்தல், சிவபுராணங் களைக் கேட்டல், சிவாலயதரிசனஞ் செய்தல், சிவனடியாரிடத் தன்றிப் பிறரிடத்துப் போசனம் பண்ணாமை, சிவனடியார் களுக்குக் கொடுத்தல் என்பனவைகளாம்.

**உபதேசகாண்டம்**

வாசப் பூதி யுருத்திர மாமணி
பூசிப் பூணல் குரவரைப் பூசித்த
லாசைப் பாட்டி னரனைப் புகழுத
லீசற் குள்ளன நாம மியம்புதல்.

எந்தை யீச னருச்சனை யோம்புத
றந்தி ரச்சிவ தன்மம் புரிகுதன்
முந்தை யோன்கதை கேட்டன் முறைமையாற்
புந்தி கூர்ந்தர னாலயம் போற்றுதல்.

ஒத்த பத்த ரிடத்தல தோரிடந்
துய்த்த னீத்தலத் தொண்டரிற் றொண்டராய்ச்
சித்த மன்புற வீதன் முன் செப்பிய
பத்து மீங்கிவை காணப் படுதிரால்.

6. உடலிலக்கணம் பத்தாவன : சிவபெருமானுடைய பெருமை யைச் சிந்திக்குந்தோறும் பேசுந்தோறும் கண்டம் விம்முதல், நாக்குத் துடித்தல், உதடு துடித்தல், சரீரநடுங்குதல், உரோமஞ் சிலிர்த்தல், குறுவேர்வை கொள்ளல், நாக்குத் தழுதழுத்தல், ஆனந்தக் கண்ணீர் சொரிதல், வாய்விட்டழுதல், பரவசமாய்த் தன்னை அயர்த்தல் என்பவைகளாம்.

## உபதேசகாண்டம்

தொண்டர் மெய்யிற் றுலங்கு மிலக்கண
முண்டொர் பத்தென் றுரைத்த துரைக்குதுங்
குண்ட யூர்தி சிவத்தியல் கூறுங்காற்
கண்ட முற்றொரு விம்மிதங் காட்டுதல்.

ஏத்து மெந்தை யியற்கை யுணர்தொறு
நாத்து டித்தெழும் பாமை நகைப்புறம்
பூத்த முத்தந் துடித்தல்வி பூதிகொண்
டார்த்த ணிந்ததன் னங்கங் குலுங்குதல்.

மயிர்ப்பு றம்புள கித்தல் வரன்முறை
வியர்த்த றன்வச மன்றி விளம்புநாப்
பெயர்த்தி டாமையா னந்தப் பெருங்கணீ
ரயற்ப டுத்துதல் வாய்விட் டழுதலே.

பரவ சத்தின னாகிப் படர்சடை
யரனு ளப்படத் தன்னை யயர்க்குதல்
விரவு பத்தும் விடுத்துரைத் தோமிவை
வரமு னித்தலை வீர்மனக் கொள்விரால்.

7. அகத்திலக்கணம் மூன்றாவன : பஞ்சாக்ஷரத்தை மானதமாகச் செபித்தல், மானதபூசை, சிவபெருமானைத் தன்னோடு பிரிவறக் காண்டல் என்பவைகளாம்.

### உபதேசகாண்டம்

உளத்தி லக்கண மூன்றென் றுரைத்தன
மளக்கி னஞ்செழுத் துன்ன லகப்பட
வளர்க்கு மானத பூசனை மைக்கடுக்
களத்த னைத்தனை யொன்றெனக் காண்குதல்.

8. இவ்விருபத்து மூன்றிலக்கணங்களுள் ஒன்றாகிய சிவபுராணங் கேட்டல் தான் ஓரிலக்கணமாய் நிற்றலன்றித் தன்னையும் தன்னை யொழிந்த சிறப்பிலக்கணங்களையும் மற்றைப் பொதுவிலக்கணங்களையும் வருவித்தற்குக் கருவியாயும் நிற்றலுடையது. யாதினாலெனின், விபூதி ருத்திராக்ஷதாரணம் முதலிய புண்ணியங்களையும் அவற்றின் பயனாகிய இன்பத்தையும் கொலை முதலிய பாவங்களையும் அவற்றின் பயனாகிய துன்பங்களையும் அறிவிப்பது சிவபுராணமாகலினென்க. ஆதலால், சைவசமயிகள் சிவபுராணங் கேட்டல் வேண்டுமென்பது துணிவு.

9. புராணங்கள் பதினெட்டு. அவையாவன : பிரமபுராணம், பதுமபுராணம், வைணவபுராணம், சைவபுராணம், பாகவத புராணம், பவிடியபுராணம், நாரதீயபுராணம், மார்க்கண்டேய புராணம், ஆக்கினேயபுராணம், பிரமகைவர்த்தபுராணம், இலிங்கபுராணம், வராகபுராணம், காந்தபுராணம், வாமன புராணம், மற்சபுராணம், கூர்மபுராணம், காருடபுராணம், பிரமாண்ட புராணம் என்பனவாம். இப்பதினெட்டும் நாவிலக்ஷத் தெண்ணாயிரங் கிரந்தமுடையன.

10. அவற்றுள் சைவபுராணம், பவிடியபுராணம், மார்க்கண்டேய புராணம், இலிங்கபுராணம், காந்தபுராணம், வராகபுராணம், வாமனபுராணம், மற்சபுராணம், கூர்மபுராணம்,

பிரமாண்ட புராணம் என்னும் பத்துஞ் சிவபுராணங்கள். இவற்றுள், சைவ புராணம் இருபத்து நாலாயிரங் கிரந்தமும், பவிடியபுராணம் முப்பத்தோராயிரங் கிரந்தமும், மார்க்கண்டேய புராணம் முப்பத்தீ ராயிரங் கிரந்தமும், வராக புராணம் இருபத்துநாலாயிரங் கிரந்தமும், வாமன புராணம் பதினாலாயிரங் கிரந்தமும், மற்ச புராணம் பதினாலாயிரங் கிரந்தமும், கூர்மபுராணம் ஆறாயிரங் கிரந்தமும், பிரமாண்ட புராணம் பன்னீராயிரங் கிரந்தமு முடையன. ஆகச் சிவபுராணம் பத்துக்குங் கிரந்தம் இரண்டிலக்ஷத் தறுபத்தெண்ணாயிரம்.

11. காருடபுராணம், நாரதீயபுராணம், வைணவபுராணம், பாகவத புராணம் என்னுநான்கும் விட்டுணு புராணங்கள். இவற்றுள், காருட புராணம் ஆறாயிரங் கிரந்தமும், நாரதீய புராணம் இருபத்தையாயிரங் கிரந்தமும், வைணவ புராணம் ஆறாயிரங் கிரந்தமும், பாகவத புராணம் பதினெண்ணாயிரங் கிரந்தமுமுடையன. ஆக விட்டுணு புராண நான்கிற்குங் கிரந்தம் ஐம்பத்தையாயிரம்.

12. பிரமபுராணம், பதுமபுராணம் என்னுமிரண்டும் பிரம புராணங்கள். இவற்றுள், பிரமபுராணம் பதினாயிரங் கிரந்தமும், பதும புராணம் ஐம்பத்தையாயிரங் கிரந்தமுமுடையன. ஆகப் பிரம புராணம் இரண்டிற்கும் கிரந்தம் அறுபத்தையாயிரம்.

13. ஆக்கினேயம் அக்கினிபுராணம். இது எண்ணாயிரங் கிரந்த முடையது.

14. பிரமகைவர்த்தம் சூரியபுராணம். இது பன்னீராயிரங் கிரந்த முடையது.

15. சிவபுராணம் பத்தும் சாத்துவிகங்களாம். சத்துவகுணம் வெண்ணிறமுடையதும் சுகத்துக்கும் ஞானத்துக்கும் இடமுமாம். யோகிகளுக்கு ஞானம் உபதேசிக்குஞ் சிவபெருமான் தெளிபளிங்கு வடிவினராய் எங்குமுறங்காது பிராமணாதிபதியா யிருப்பர்.

16. விட்டுணுபுராண நான்கும் தாமசங்களாம். தமோகுணம் கருநிறமுடையதும் உதாசீனரூபமும் கூட கிருத்திய சமர்த்தமுமாம். நித்திரை, சோம்பு, பிரமாதம், வஞ்சனம் முதலியவைகள் தாமசங்கள். விட்டுணு கரியரும் சேஷசயனஞ் செய்வோரும் பத்தரை மோகிப்பிப்பவருமாயிருப்பர்.

17. பிரமபுராணம் இரண்டும் இராசசங்களாம். இரசோகுணம் சிவந்த நிறமுடையதும் துக்கத்துக்கிடமும் சஞ்சலரூபமுமாம். பிரமாச் செந்நிறமுடையராய்ச் சஞ்சலரூபியாயிருப்பர்.

18. அக்கினிபுராணமும் சூரியபுராணமும் திரிகுணயுத்தமாம். அக்கினியுஞ் சூரியனும் முக்குணவடிவினராயிருப்பர்.

19. ஆதலால், இப்பதினெட்டி னுள்ளுஞ் சிவபுராணங்கள் பத்துமே உயர்ந்தனவாம். ஆகையாற் சிவனடியார்கள் சிவபுராணங்களையே விதிப்படி மெய்யன்போடு கேட்கக் கடவர்கள்.

### உபதேசகாண்டம்

நடத்து மூவறு சரிதையுண் முக்கணன் சரிதைநா யகமென்றே
யெடுத்து ரைப்பது சுருதிமற் றாகம மிப்படி யெடுத்தோதுங்
கடுக்க ளத்தனுக் கன்புடைத் தாகிய புராணகா தையை யன்னோன்
றெடுத்த சோதிமா மயமெனப் பகர்வர்நற் றொண்டரிற்
[றலைநின்றோர்.

வேட்டு நிற்சிவ பதவியே வேட்டுற விரும்பிக்
கேட்டு நிற்சிவ புராணமே கேட்டுற வினைகொண்
டாட்டு மன்பதை யீறுகண் டந்தகன் றூதர்
வீட்டு முன்னரே சிவத்தினில் விருப்புற வேண்டும்

20. சிவபுராணம் படித்துப் பொருள் சொல்லுதற்கு உரிய இடங்களாவன தேவாலயம், திருமடம், நதிக்கரை, குளக்கரை, திருநந்தனவனம், யாகசாலை முதலிய சுத்தஸ்தானங்களாம்.

### உபதேசகாண்டம்

புண்ணி யச்சிவ புராணமோ திப்பொருள் விரிப்பி
னண்ண லாலய நதிக்கரை குளக்கரை யன்றேன்
மண்ணு றுந்திரு மடமெனு மித்தலை மருவிக்
கண்ணு தற்பர னைத்தொழு தோதுறக் கடவார்.

### பிரமோத்தரகாண்டம்

மூவ ராதி முழுதுல கத்துள
தேவர் வாழுஞ் சினகர முன்னருந்
தூவு தண்ணற வுண்டு சுரும்பிமிர்
பூவர் சோலைப் புனித விடத்தினும்.

தீதி லாத செழுநதி தீரத்துங்
கோதி லார்கள் குழீஇய விடத்தினும்
வேத வேதியர் வேள்வித் தலையினு
மாதி மாதவ ரம்மனை முற்றத்தும்.

மற்றும் வேறுள புண்ணிய மல்குசீ
ருற்ற தெவ்விட மவ்விடத் தோதுவர்
பற்றி நாளும் பரமன் றிருக்கதை
முற்று மோதி முழுதுணர் கேள்வியார்.

21. சிறியோர்கள் களிக்குமிடத்திலும், சூதாடுமிடத்திலும், பெண்கள் உண்டாட்டுச் செய்யுமிடத்திலும், அறிவில்லாதவர்கள் இருக்குமிடத்திலும் புராணம் படிக்கலாகாது.

### பிரமோத்தரகாண்டம்

சிறியர் தீக்களி செய்யு மிடத்தினு
மறிவி லாளர்சூ தாடு மரங்கினு
முறவில் வஞ்சிய ருண்டாட் டிடத்தினும்
பொறியி லாளர் பொருந்து மிடத்தினும்.

கம்ப மால்கரி நல்கினுங் கண்ணக
னிம்பர் நாடு முழுவது மீயினுஞ்

செம்பொன் மாரி பொழியினுஞ் செஞ்சடை
நம்பன் காதை நயந்து நவிற்றிடார்.

22. திருக்கோயிலிலே சிவபுராணமண்டபஞ்செய்வித்து, அதிலே சிவபுராணபுத்தகத்தைப் பீடத்தின்மீது வைத்து, நாடோறும் விதிப்படி பூசை செய்துகொண்டுவரின், அது கோடிசிவலிங்கப் பிரதிட்டைக்குச் சமமாகும்.

### உபதேசகாண்டம்

எந்தை கோயிலுட் டிருமுறை மண்டப மெடுத்துத்
தந்த பீடிகைத் தலத்தினிற் றிருமுறை தந்து
சிந்தை யன்பினோ டாங்கதற் கருச்சனை செய்தா
லுந்து மேற்றினன் பிரதிட்டை கோடியொப் புறுமால்.

23. சிவபுராணம் படித்துப் பொருள் சொல்லுதற்கு அதிகாரிகளா வார் அந்தணர் அரசர் வணிகர் வேளாளர் என்னும் நான்குவருணத் துட்பட்டவராய், உடற்குற்றங்களில்லாதவராய், நல்லொழுக்க முடையவராய், நிகண்டு கற்று இலக்கியவாராய்ச்சிசெய்து இலக்கண நூலிற் பயின்றவராய், நீதி நூல்களையும் சைவ நூல்களையும் ஓதியுணர்ந்தவராப், சந்தியாவந்தனம் சிவபூசை முதலிய நித்திய கருமங்களைத் தவறாமல் விதிப்படி சிரத்தையோடு செய்பவராயுள்ளவர்.

### உபதேசகாண்டம்

பெருகுநூற் புராண மோதிப் பிரித்துரைத் திடுவோ னான்கு
வருணத்தி லொருவ னாகிப் பொறையொடு மரபி னோங்கி
முருகவே ளடிக்கீழ்த் தொண்டு முயன்றவ னாகி யம்பொற்
றிருவொடுந் தனய ரோடுங் கிளையொடுஞ் சிறக்க வேண்டும்.

### சிவஞானதீபம்

நிலையுறுதி யாசார மொழுக்கஞ் சீல
நிறையறிவு கருணைதவ நெறிநி லாமற்
கொலைகளவு கட்காம முதலா வுள்ள
கொடும்பவமே தவமாகக் கொள்ளுந் தீயோ

ருலைவிலருஞ் சிவன ருணூ லோத லாகா
தோதினுமங் கவருரைகொள் ளொணாது நீலம்
புலையர்மரு விடுந்தெருவிற் பொல்லாக் கும்பி
பொருந்தியிடுங் குழியதனுட் பூத்த தாமே.

24. சிவபுராணஞ் சுபதினத்திற் சுபமுகூர்த்தத்தில் ஆரம்பித்தல் வேண்டும். ஆரம்பிக்குந் தினத்தினும், முடிக்குந் தினத்தினும், திருக்கல்யாணமுதலிய சுபசரித்திரங்கள் படிக்குந்தினங்களினும், சிவபுராணமண்டபத்தைக் கோமயத்தினாலே திருமெழுக்கிட்டுக் கமுகுகளையும் வாழைகளையும் கரும்புகளையும் நாட்டி மேற்கட்டி கட்டி, கொய்யப்பட்ட பட்டுக்களையும் பூமாலை களையுந் தூக்கி அலங்கரித்தல்வேண்டும். சிவபுராணபோதகர் நாடோறும் ஸ்நானஞ்செய்து தோய்த்துலர்ந்த வஸ்திரமிரண்டு தரித்துச் சந்தியாவந்தனமும் சிவபூசையும் முடித்துக்கொண்டு, சிவபுராண புத்தகத்தைப் பீடத்தின்மீது வைத்துச் சந்தனம் புட்பம் தூபம் தீபம் முதலியவற்றினாலே பூசைசெய்து நமஸ்காரம்பண்ணி, ஆசனத்திருந்துகொண்டு புராணம் போதித்தல் வேண்டும். அவர் அங்கே யாரையும் அஞ்சலி செய்தலாகாது.

### உபதேசகாண்டம்

மங்கல தினத்திற் றேவ ராலயங் குரவர் வாயில்
பொங்குநீர் நதியின் பாங்கர் புண்ணிய தலங்கண் மன்றந்
தங்குகோ மயத்தா னீவித் தண்மலர்த் தொடைய னாற்றி
யங்கண்மாக் கரும்பு வாழை தீபமிட் டமையச் செய்து.

பட்டுடை கொய்து நாற்றிப் பசுங்கமு கமைத்துப் பின்ன
ரிட்டபொற் பீடந் தன்னிற் புத்தக மினிதி னேற்றி
மட்டுவார் தூபஞ் சாந்த மலரினா லருச்சித் தாங்க
ணட்டவர் கிளைஞ ரோடுங் கேட்பது நன்மைத் தாமால்.

### பிரமோத்தரகாண்டம்

ஓங்கு சீர்த்திருக் காதை யுரைக்குநர்
தாங்கு பீடிகை யின்றித் தரையிரா

ராங்கண் யாரையு மஞ்சலி செய்திடார்
தீங்கி னோருரை சிற்றவை சேர்ந்திடார்.

25. சிவபுராணங் கேட்போர் நாடோறும் ஸ்நானஞ்செய்து தோய்த்துலர்ந்த வஸ்திரந்தரித்து நித்தியகருமமுடித்துக்கொண்டு புத்தகபூசை முற்றியவுடனே சிவபுராண போதகரைக் கிழக்கு முகமாக ஆசனத்திருத்திச் சிவபெருமானாகப் பாவித்துச் சந்தனம் புஷ்பம் முதலியவைகளினாலே பூசித்து நமஸ்காரஞ்செய்து, சுற்றத்தார்களோடும் சிநேகிதர்களோடும், சித்திரப்பாவைபோல அசைவற மௌனமாக இருந்து, மெய்யன்போடு கேட்டுக் கொண்டு மீட்டும் நமஸ்காரஞ் செய்தல்வேண்டும்.

### உபதேசகாண்டம்

ஏசறு புராண காதை படித்தெடுத் திசைப்போர்க் கென்ன
வாசன மளித்துப் பூவாற் சாந்தத்தா லவர்க்கு வேண்டும்
பூசனை யியற்றி யன்னோர் பூருவ நோக்கி வைக
மாசறு சரிதை கேட்போ னிருப்பது வடக்கு நோக்கி.

### பிரமோத்தரகாண்டம்

நாய கன்கதை நாடொறுங் கேட்குநர்
தூய நீரினிற் றோய்ந்துவெண் ணீறணிந்
தேய நித்த கரும மியற்றிப்பின்
காய வைம்புல னுங்கருத் தொன்றியே.

வல்ல தேசிக னுக்கு மணித்தவி
சொல்லை நல்கி யுறுபொரு ளீந்துநன்
கல்ல வாணிகிளத்த வடங்கிவன்
புல்ல ரானவ ரைபுறம் போக்கியே.

பத்தி யோடொல்கு பாவகத் தோடுறா
வொத்த நற்றவி சேற லொழித்து நூல்
வித்த கற்குக்கீழ் மென்றவி சொன்றியே
சித்தம் வேறறக் கேட்பது செவ்விதால்.

**சிவதருமோத்தரம்**

புத்த கத்தினைப் பூசை புரிகிலார்
சித்தங் கூர்தரத் தேசிகன் றன்னையு
மத்த கைப்பல நீங்குவ தன்றியுங்
கொத்தை சேர்நிர யக்குழி கூடுவார்.

ஆத லாற்புத்த காதி யருங்சனை
காத லாற்செய்க காமுறு வார்பலம்
வேத னாநர கக்குழி வேண்டிலா
ரேதெ னுந்தம சத்திக் கிசையவே.

**சைவசமயநெறி**

படிக்கும் பொழுது பணிக்குர வன்றாண்
முடிக்கும் பொழுது முயன்று.

26. நாடோறும் புராணந் தொடங்கும்போதும் முடிக்கும் போதும் காப்புச் சொல்லல்வேண்டும். காப்புக்கு முன்னும் பின்னும் "திருச்சிற்றம்பலம்" என்று உச்சரித்தல் வேண்டும். காப்புச் சொல்லும்பொழுது யாவருங் கும்பிட்டுக் கொண்டிருத்தல் வேண்டும்.

27. புராணம் வாசிப்பவர் சபையார் யாவருங் கேட்கும் பொருட்டுத் தெளிவுபெற வாசித்தல்வேண்டும். வாசிக்குங் காலத்துக்கும் எடுத்துக்கொண்ட விஷயத்தினது குணத்துக்கும் ஏற்ற இராகத்தில் வாசித்தல் வேண்டும். எச்சுதியில் எவ்விராகத்தில் வாசிக்கப்படுகின்றதோ அச்சுதியில் அவ்விராகத்திற்றானே பொருள் சொல்லப்படல்வேண்டும். இலக்கணப் பிழையில்லா மலும், வெளிப்படையாகவும், இன்றியமையாவிடங்களில் விரிவாகவும் பொருள் சொல்லல் வேண்டும்.

28. சிவபுராணபோதகரைச் சிவபெருமானாகப் பாவியாது மனுஷராகப் பாவிப்போரும், சிவபுராணம் படிக்குஞ்சபையிலே உயர்ந்த ஆசனத்திருப்போரும், காலை நீட்டிக்கொண்டிருப்

போரும், சயனிப்போரும், நித்திரை செய்வோரும், வெற்றிலை பாக்குண்போரும், உடம்பு போர்த்துக் கொள்வோரும், பிற வார்த்தைகளைப் பேசுவோரும், குதர்க்கஞ் செய்வோரும், பொறாமையினாலே பிறிது பொருளைக் கற்பிப்போரும், அன்பின்றிக் கேட்போரும், சிரிப்போரும், இடையில் எழுந்து சிறிது கருமத்திலே செல்வோரும், புராணத்தைப் பொய்யென் போரும் நெடுங்காலம் நகரங்களிலே கிடந்து துன்பம் அனுபவித்துப் பின்பு இழிவாகிய பிறப்புக்களிலே பிறந்து வருந்துவர்கள்.

## உபதேசகாண்டம்

அறந்த ருஞ்சிவ புராணமோ துறுமவை யகத்துப்
பிறங்கு வெள்ளிலை நுகர்பவர் பிறமொழி பகர்வா
ருறங்கு கின்றவர் நீட்டுறுங் காலின ருவற்றைத்
திறம்பு பொய்மையென் றுரைப்பவர் களிபடச் சிரிப்போர்.

இழுதை மாக்கண்மற் றீங்கிவ ரிறுதியிற் றென்பாற்
செழுக நீடிய நெடுங்குழிச் செலற்கரு நிரயத்
திழிவ ராங்கது விழுங்கிமீண் டெதிரெடுத் துமிழ
வழுவி மற்றது விழுங்குற வருந்துவர் நெடுநாள்.

## பிரமோத்தரகாண்டம்

எக்கு லத்தவ னாயினு மீர்ஞ்சடை
முக்க ணான்கதை யோது முதல்வனை
மக்க ளுள்ளிவ னும்மக னென்பவர்
கக்கு வாய்புழுக் கான்றிடு நோய்கொள்வார்.

ஆன்ற காதையின் மேல்விருப் பற்றவர்
தோன்று முற்கதை பொய்யென்று சொல்பவர்
மூன்று கோடி நரகத்தின் மூழ்கியே
நான்ற நாவுடை நாய்ப்பிறப் பெய்துவார்.

அன்றிக் கேட்கு மிடத்தழுக் காற்றினாற்
கன்றி வேறோர் பொருளினைக் கற்பிப்பா
ரொன்ற லாத துரைத்தெதிர் வாதிப்பார்
பன்றி யாயிந்தப் பாரி லுதிப்பரே.

அன்பி னிற்கதை கேட்ப தலாற்பிறர்
வன்பி னெய்தி மனம்வைத்துக் கேட்பவர்
துன்ப மெய்து சுடலையி லோங்கிய
வின்ப மில்கனி யெட்டிய தாகுவார்.

கூறு மாக்கதை கூட்டுமு னாப்பணே
வேறு தங்கரு மத்து விரைந்துபோஞ்
சீறு சிந்தையர் செல்வத்தைத் துய்க்குங்கா
லீறு செல்லா திடையி லிழப்பரே.

மஞ்ச மேறியும் வெள்ளிலை மாந்தியு
நஞ்ச முண்டவர் நற்கதை கேட்குக
ரஞ்சி யோவென் றரற்றிக் கழுநுனைத்
தஞ்ச மாகக் கிடந்து தவிப்பரே.

கயிலை யண்ணல் கதையை நிகழ்த்துழித்
துயில்பு ரிந்திடுந் தொல்வினைப் பாதகர்
வெயில் கரந்தடு வெங்கொடிக் கஞ்சியே
யயின்முட் காட்டுறை கூகைய தாகுவார்.

படர்ந்த வேணிப் பரமன் றிருக்கதை
கிடந்த சேக்கையிற் கேட்கு மறிவிலோர்
மிடைந்த மால்வரை யுச்சி விடர்புகுந்
தடைந்த மாசுண மாகிப் பிறப்பரே.

ஈசன் காதைசொல் வானன்றி யின்னுமோர்
தேசி கன்பிற னுண்டென்று செப்புமோ
காசு தீர்க்குங் கதைவிளக் கங்கொடு
மாசின் மாக்கண் மனவிரு ணீக்கலால்.

29. சிவபுராணத்தை முதற்றொடங்கி முடிவு வரையும் இடைவிடாது நியமமாகக் கேட்டல்வேண்டும். தினந்தோறும் ஒவ்வொரு சிவபத்தருக்கு அன்னங்கொடுத்தல்வேண்டும். புராணம் ஆரம்பித்த காலத்தினும், திருக்கல்யாண முதலிய சுபசரித்திரங்கள் படித்த காலங்களினும், காண்டங்கள் முடிந்த

காலங்களினும், புராணமுடிந்த காலத்தினும், சிவனடியார்களுக்கும் பிராமணர் களுக்கும் இயன்றமட்டும் அன்னதானஞ்செய்து, புராண போதகருக்குப் பூசை பண்ணி வஸ்திரம் ஆபரணம் முதலியவை கொடுத்தல்வேண்டும். புராணமுடிந்தபின், புராணத் திருமுறையையும் போதகரையும் மங்கல வாத்தியங்கள் ஒலிக்க வீதிவலஞ் செய்வித்தல்வேண்டும்.

### உபதேசகாண்டம்

ஆதிதொட் டீறு காறு முடக்குறா தருளிற் கேட்க
வோதிய புராணத் தெம்மா னுமையினை மணக்கு நாளிற்
காதுவேற் குமரற் கம்பொற் கதிர்முடி கவிக்கு நாளிற்
றீதறு தெய்வ யானை திருமணஞ் சிறக்கு நாளின்.

மறையவர்க் கினிய வேண்டும் போசன மரபி னீந்து
நிறைதமிழ்ப் புராண காதை நிகழ்த்தினோர்ப் பணிந்து போற்றி
யுறுகதிர்ப் பசும்பொ னாடை பொலங்கல னுவந்து நல்கி
நறைகம ழலரிற் சாந்தி னருச்சனை நடத்தல் வேண்டும்.

30. சிரத்தையோடு சிவபுராண புத்தகத்தை எழுதிச் சிவனடியார்களுக்குக் கொடுத்தவரும், எழுதித் தம் வீட்டில் வைத்துப் பூசை செய்தவரும், சிவபுராணத்தை வாசித்தவரும், அதற்குப் பொருள் சொன்னவரும், அதனைக் கேட்டவரும் சிவபதத்தையடைவர்.

### உபதேசகாண்டம்

எழுதி யோர்ந்துண ரெம்முழைச் சரிதைகேட் டிருப்பவ
[ரிரக்கங்கூர்ந்
தழுதல் விம்முத னாத்தடு மாறுத லணிமயிர்ப் புளகெய்தித்
தொழுத லெய்தினோர் பெறுகுவ தியாமலாற் சொலற்கரி
[தெவர்க்கேனும்
பழுதி னான்மறை நுணுக்கமு மின்னணம் பகர்வது பல்லூழி.

கள்ளு யிர்த்தபூங் கொன்றையா னருட்சிவ காதை
யெள்ளில் சிந்தையால் விதிமுறை யினிதுகேட் டுவந்து

வெள்ள வார்சடை யெம்பிரான் றிருவருள் விளைவித்
தெள்ள ருங்கதி புகுந்தவர்க் கிலக்கமா ரிசைப்பார்.

ஓது நாவினுங் கேட்பவர் செவிப்புலத் துள்ளுந்
தீதில் சிந்தையோர் சிரத்தினுந் திருவரு ளிரங்கி
மாது பாகனுற் றுறைகுவன் மாதவத் துறையீ
ராத லாற்கதி யடைந்தன கேட்டவை யனைத்தும்.

எழுதி யன்பருக் கீந்தவர் திருமுறை யெழுதித்
தொழுது தம்மனைத் தொகுப்பவர் பெருநலந் துய்த்தீண்
டொழுகு காலம்வீற் றொவ்வொரு கற்பமோ ரெழுத்திற்
கழிவி லாப்பெருங் கயிலையுற் றருங்கதி யடைவார்.

திருச்சிற்றம்பலம்

சகல வேதாந்தங்களின் சாரத்தையும் உள்ளடக்கினதாய் ஐம்பது கண்டங்களாற் புனையப்பட்டதாய் ஓரிலக்கங் கிரந்த முடைத்தாயிருக்குங் காந்தபுராணமானது சனற்குமாரசங்கிதை, சூதசங்கிதை, பிரமசங்கிதை, விட்டுணுசங்கிதை, சங்கரசங்கிதை, சூரசங்கிதை என ஆறு சங்கிதையுடையது. அவற்றுள், சனற்குமார சங்கிதை ஐம்பத்தையாயிரங் கிரந்தமும், சூதசங்கிதை ஆறாயிரங் கிரந்தமும், பிரமசங்கிதை மூவாயிரங்கிரந்தமும் விட்டுணுசங்கிதை ஐயாயிரங்கிரந்தமும், சங்கரசங்கிதை முப்பதினாயிரங் கிரந்தமும், சூரசங்கிதை ஆயிரங்கிரந்தமுமுடையன. முப்பதினாயிரங்கிரந்த முடைய சங்கிர சங்கிதை பன்னிரண்டு கண்டமுடையது. அவற்றுள் முற்பட்டது சிவரகசியகண்டம், அது பதின்மூவாயிரங் கிரந்தமுடையதாய், சம்பவகாண்டம், அசுரகாண்டம், மகேந்திர காண்டம், யுத்தகாண்டம், தேவகாண்டம், தக்ஷகாண்டம், உபதேசகாண்டம் என ஏழு காண்டங்களையுடையதாயிருக்கும். அவற்றுள், முதலாறு காண்டத்தையும், கச்சியப்பசிவாசாரிய சுவாமிகள் கந்தபுராணமெனப் பெயரிட்டுத் தமிழில் அருளிச்செய்தனர். ஏழாவதாகிய உபதேசகாண்டத்தை கோனேரியப்பமுதலியார் தமிழில் அருளிச்செய்தனர்.

உ

## கச்சியப்பசிவாச்சாரியசுவாமிகள்

# சரித்திரச் சுருக்கம்

தொண்டை மண்டலத்திற் சிறந்து விளங்காநின்ற காஞ்சீபுரத்தின் கண்ணே, ஆதிசைவர் குலத்திலே, கல்வியறி வொழுக்கங்களினாலுஞ் சிவபத்தி சிவஞானங்களினாலுஞ் சிறப்புற் றோங்கிய காளத்தியப்பசிவாசாரியர் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் காஞ்சீபுரத்திலுள்ள குமரகோட்டத்தருச்சகருள் ஒருவர். அவர் நெடுங்காலம் புத்திரனில்லாமையாற் பெருங் கவலை கொண்டு, புத்திரபாக்கியத்தின்பொருட்டுக் குமர கோட்டத்தின் கண் எழுந்தருளிய பெருங்கருணைக் கடலாகிய சுப்பிரமணியக் கடவுளை விதிப்படி சிரத்தையோடும் உபாசித்துக் கொண்டு வந்தார். வரும்பொழுது, அக்கடவுளது திருவருளி னாலே, தமிழ்நாட்டார்கள் சுப்பிரமணியபத்தி பெற்றுய்யும் பொருட்டு, அச்சிவாசாரியருக்கு அவருடைய கற்பினிற் சிறந்த பத்தினியாரது அருமைத் திருவயிற்றின் ஒரு சற்புத்திரர் திருவவதாரஞ்செய்தார்.

அப்புத்திரருக்குக் கச்சியப்பர் என நாமகரணஞ் செய்யப் பட்டது. அவர் ஐந்தாம் வயசிலே, வித்தியாரம்பஞ் செயப் பெற்று, சம்ஸ்கிருதம் தமிழ் என்னும் இரண்டு பாஷைகளையுங் கற்பாராயினார். அன்பு அருள் வாய்மை பொறை அடக்கம் முதலிய நற்குணங்களெல்லாம் அவரோடுடன் பிறந்து அவரோடு டன் வளர்ந்தன. அவர் ஏழாம் வயசிலே உபநயனஞ் செயப்பெற்று, வேதாந்தியயனஞ் செய்வாராயினார். சிலகாலத்துள்ளே சம்ஸ்கிருதத்தில் வேத வேதாங்கங்களையும் தமிழில் இலக்கண விலக்கியங்களையுங் கற்று வல்லராயினார்.

அவர் சிலகாலமாயபின் சமயதீக்ஷை பெற்று, தமிழ்வேத மாகிய தேவார திருவாசகங்களை ஓதுவாராயினார். அதன்பின் விசேஷதீக்ஷை பெற்றுச் சைவாகமங்களிற் கிரியாகாண்டங் களைக் கற்றறிந்துகொண்டார். அதன்பின் நிருவாண தீக்ஷையும்

ஆசாரியாபிஷேகமும் பெற்று, சைவாகமத்தின் ஞானகாண்டங் களை ஓதி, அவற்றின் பொருளையும் தேவார திருவாசகங்களின் பொருளையுங்கேட்டு, அப்பொருள் வேதத்தின் ஞானகாண்டங் களாகிய உபநிடதங்களின் பொருளோடு அபேதமாயிருக்கக் கண்டு, அதனைச் சிந்தித்துத் தெளிந்துகொண்டார்.

இவ்வியல்புடையராய் விளக்கமுற்ற கச்சியப்பசிவாசாரியர் குமரகோட்டத்துச் சுப்பிரமணியக்கடவுளை மெய்யன்போடு பூசைசெய்து கொண்டுவந்தார். ஒருநாட் சுப்பிரமணியக்கடவுள் கச்சியப்பசிவாசாரியருக்குச் சொப்பனத்திலே தோன்றி, "அப்பனே, நீ கந்தபுராணத் தாறுசங்கிதைகளுட் சங்கரசங்கிதை யின் முதற் கண்டமாகிய சிவரகசிய கண்டத்திலுள்ள நமது சரித்திரத்தைக் கந்தபுராணம் எனப் பெயரிட்டுத் தமிழிலே பெருங்காப்பியமாகப் பாடக்கடவாய்" என்று ஆஞ்ஞாபித்து, "திகட சக்கரச் செம்முக மைந்துளான்" என்று அடியெடுத்துக் கொடுத்து மறைந்தருளினார். உடனே கச்சியப்பசிவாசாரியர் விழித்தெழுந்து, அழலிடைப்பட்ட மெழுகுபோல நெஞ்ச நெக்குருக, உரோமஞ்சிலிர்ப்ப, உரை தடுமாற, கரையற்ற இன்பக்கடலின் அழுந்தி, "ஒன்றுக்கும் பற்றாத புழுத்த நாயினுங் கடையனாகிய தமியேனையும் ஒரு பொருட் படுத்து, வந்தருளிச்செய்த எம்பெருமானாகிய சுப்பிரமணியக் கடவுளது பெருங்கருணைத்திறம் இருந்தபடி என்னை என்னை" என்று ஆனந்தக்கூத்தாடினார்.

மற்றைத்தினத்திலே கச்சியப்பசிவாசாரியர் நித்தியகருமம் முடித்துக்கொண்டு, சுப்பிரமணியபூசை செய்தபின், புராணம் பாட ஆரம்பித்தருளினார். நாடோறும் நூறு செய்யுள் பாடி, அவை எழுதப்பட்ட ஏட்டையும், எழுத்தாணியையும், இராத்திரி காலபூசை முற்றியபின் குமரகோட்டத்தடிகளுடைய திருவடிக்கீழ் வைத்துவிட்டுத் திருக்கதவந் திருக்காப்பிட்டுக் கொண்டு தமது திருமாளிகைக்குப் போவார். பிற்றைநாட் காலையிலே நித்திய கருமமுடித்துக்கொண்டு, பூசையின் பொருட்டுத் திருக்கோயிலி னுள்ளே புகுந்து, ஏட்டை எடுத்துப்

பார்த்து, அதிற் சிலவிடங்களிலே திருத்தப்பட்டிருத்தல் கண்டு, அதனைச் சிரமேற்கொண்டு ஆனந்தபரவசராய்ச் சிறிதுபொழுது நின்று பின் பூசைசெய்வார்.

இவ்வாறே கச்சியப்பசிவாசாரியர் கந்தபுராணம் பாடி முடித்தபின், அதனைக் குமரகோட்டத்தில் அரங்கேற்றும் பொருட்டுச் சுபதினமுஞ் சுபமுகூர்த்தமும் நிச்சயித்துக்கொண்டு, எங்குமுள்ள சிவனடியார்களெல்லாருக்கும் பத்திரம் விடுத்தருளினார். ஏவலாளர்கள் திருக்கோயிலையும் திருவீதிகளையும் மிக அலங்கரித்தார்கள். சுட்டப்பட்ட சுபதினத்திலே, திருநெறித் தமிழாகிய தேவார திருவாசகங்களில் வல்ல பெரியோர்களும், சிவாகமவிற்பன்னர்களும், வேதவேதாங்க பண்டிதர்களும், தமிழ்ப்புலவர்களும், இரசாக்களும், பிரபுக்களும், பிறருமாகிய எல்லாரும் வந்து கூடினார்கள்.

கச்சியப்பசிவாசாரியர் குமரகோட்டத்தடிகளைப் பூசை செய்து, அவர் சந்நிதானத்திலே மெழுகிப் பீடமிட்டு, அதின்மேற் பட்டை விரித்து, புஷ்பங்களைத் தூவித் தூபங்கொடுத்து ஆசனங் கற்பித்து, கந்தபுராணத் திருமுறையை அதன்மேல் வைத்து அருச்சித்து வணங்கித் துதித்தார். பின்பு இருந்துகொண்டு, "திகட சக்கரச் செம்முக மைந்துளான்" என்னும் முதற் செய்யுளை ஒருமுறை வாசித்து, "திகழ் தசக்கரச் செம்முகம் ஐந்துஉளான்" என்றெடுத்து, "விளங்காநின்ற பத்துத் திருக்கைகளும் செவ்விய ஐந்து திருமுகங்களுமுள்ள சிவபெருமானுடைய" என்று பொருளருளிச் செய்தார். உடனே அங்கிருந்த தமிழ்ப்புலவர்களுள் ஒருவர் "சுவாமிகாள், திகழ் தசம் திகடசம் எனப் புணர்தற்கு விதி தொல்காப்பிய முதலிய இலக்கண நூல்களுள் ஒன்றிலாயினும் இல்லையே என்றார். அதற்குக் கச்சியப்பசிவாசாரியர் தாங்கள் கூறியதொக்கும்; ஆயின் இம்முதலடி என் வாக்கன்று; சங்கப் புலவராகிய சுப்பிரமணியக் கடவுளது திருவாக்கு; அவரே எனக்கு இவ்வடியெடுத்துத் தந்தருளினர் என்றார். அதுகேட்ட அப்புலவர் புன்முறுவல் செய்து, "சுப்பிரமணியக் கடவுள் சுவாமிகளுக்கு இவ்வடி

யெடுத்துத் தந்தருளியது சத்தியமாயின் ஆகுக. ஆயினும் அது இரகசியம். அதனை நாங்கள் அங்கீகரிப்ப தெங்ஙனம்? அக் கடவுள் சுவாமிகளுக்குத் தோன்றியதுபோல எங்களுக்குந் தோன்றி, 'இவ்வடி நாமே எடுத்துக்கொடுத்தருளி னோம்' என்று திருவாய் மலர்ந்தருளின் அங்கீகரிப்பேம்; அன்றேல், இதற்கு யாதாயினு மோரிலக்கண நூலில் விதி காட்டின் அங்கீகரிப்பேம்; அல்லாக்கால், அரங்கேற்ற வொட்டேம்" என்றார். கச்சியப்ப சிவாசாரியர் "இவ்விரண்டினுள் ஒன்று நாளைச்செயப்படும்; என்றருளிச்செய்து சபையாரைப் போக்கிவிட்டு, அற்றைத் தினத்திலே திருவமுது செய்யாது, இராத்திரிகாலபூசை முற்றியபின் திருக்கதவந் திருக்காப்பிட்டுக் கொண்டு சந்நிதியிலே தரையிலே சயனித்தருளினார். அப்பொழுது சுப்பிரமணியக்கடவுள் கச்சியப்ப சிவாசாரியருக்குச் சொப்பனத் திலே தோன்றி, "அன்பனே, சோழ தேசத்தில் வீரசோழியம் என்று ஓரிலக்கண நூலிருக்கின்றது; திகழ்தசம் திகடசம் எனப் புணர்தற்கு விதி அந்நூலிற் சந்திபடலத்திற் பதினெட்டாஞ் செய்யுளிலிருக் கின்றது; சோழ தேசத்துப் புலவனொருவன் அந்நூலை நாளைக்கு இவ்விடத்திற் கொண்டுவந்து அவ்விதியை எல்லாருக்குங் காட்டுவன்" என்று திருவாய் மலர்ந்து மறைந்தருளினார்.

மற்றைநாட் சபையாரெல்லாருங் கூடியிருந்தபொழுது, கச்சியப்பசிவாசாரியர் தமக்கு முருகக்கடவுள் சொப்பனத்தில் அருளிச்செய்தமையை அவர்களுக்குச் சொல்லியருளினார். உடனே ஒரு புலவர் ஒரு புத்தகங் கையிற் கொண்டு அங்கே வந்தனர். அவரை அங்குள்ளோர்கள் நோக்கி, "நீ யாவர்? உமது கையிற் புத்தகம் யாது?" என்று வினாவினார்கள். அதற்கு அப் புலவர் "நாம் சோழதேசத்துள்ளேம்; இப்புத்தகம் வீரசோழியம்" என்றார். அப்பொழுது முன்னை நாளில் ஆக்ஷேபித்த புலவர் விரைந்து சென்று, அப்புத்தகத்தை வாங்கிச் சந்திபடலத்திற் பதினெட்டாஞ் செய்யுளை வாசித்துத் திகட சக்கரம் என்னும் புணர்ச்சிக்கு விதி அதிலிருத்தலை உணர்ந்து விம்மிதமும் மகிழ்ச்சியுமுற்றனர். மற்றைத்தமிழ்ப்புலவர்களும் ஒருவர்பின்

ஒருவராக அதனை வாங்கிப்பார்த்து விம்மிதமும் மகிழ்ச்சியு முற்றார்கள். இறுதியிலே சோழதேசத்துப் புலவர் அப் புத்தகத் தைக் கச்சியப்பசிவாசாரியார் கையிற் கொடுத்து, சபையா ரெல்லாரையும் நோக்கி, "ஆக்ஷேபம் ஒழிந்ததா ஒழிந்ததா! என்று சொல்லிவிட்டு மறைந்தருளினார். உடனே கச்சியப்பசிவாசாரியர் தம்மை யாண்டருளிய அறுமுகக்கடவுளது பெருங்கருணைத் திறத்தை நினைந்து நினைந்து, சரீரம் விதிப்புற, மயிர்க்கா றோறும் திவலை உண்டாக, என்பெல்லாம் நெக்கு நெக்குருக, மதகிடைப் புறப்படுஞ் சலம்போல ஆனந்தபாஷ்பம் பொழியப் பரானந்த பரவசராய் எழுந்தருளியிருந்தார். அப்பொழுது சபையார் எல்லாரும் "இங்ஙனம் எழுந்தருளிவந்த புலவர் குமாரக்கடவுளே" என்று துணிந்து ஆச்சரியமடைந்து, வெயிலிடைப்பட்ட வெண்ணெய்போல மனங்கசிந்துருக உரோமஞ் சிலிர்ப்பக் குறு வேர்வை கொள்ள ஆனந்தவருவி சொரிய ஆனந்தக்கூத்தாடிக் கச்சியப்பசிவாசாரியருடைய பெருமையை நன்குணர்ந்து, அவர் திருவடிகளில் அடியற்றமரம் போல் விழுந்து நமஸ்கரித்து, அவரைத் தோத்திரஞ்செய்தார்கள். ஆக்ஷேபஞ் செய்தபுலவர் கச்சியப்பசிவாசாரியரைப் பலதரமும் நமஸ்கரித்து, "எம் பெருமானே, புழுத்த நாயினுங் கடையேனாகிய தமியேன் சுவாமி களுடைய மகிமையைச் சிறிதும் அறியாது ஆக்ஷேபித்த பெருங் குற்றத்தைப் பொறுத்து அடியேன்மீது திருவருள் சுரந்தருளுக" என்று அதிவிநயத்தோடு பிரார்த்தித்து, மீட்டும் அடியற்றமரம் போல் வீழ்ந்துகிடந்தார். கச்சியப்பசிவாசாரியர் எழுந்து, அப்புலவருடைய இரண்டு கைகளையும் தம்முடைய அருமைத் திருக்கைகளினாலே பற்றி எடுத்து இறுகத் தழுவி, "ஐயரே, தங்கள் ஆக்ஷேபத்தினாலன்றோ இச்சபையாரெல்லாருக்கும் திருவருளி னுண்மை வெளிப் பட்டது. இதன் பொருட்டுத் தங்களுக்குச் செயற் பாலதாகிய கைம்மாறு யாது! அறியேம் அறியேம்" என்று பாராட்டியருளினார்.

அதன்பின் சபையாரெல்லாரும் நமஸ்கரித்து, "சுவாமிகாள், இனிப் புராணத்தைத் தடையின்றி அரங்கேற்ற ஆரம்பித்தருளுக"

என்று விண்ணப்பஞ் செய்தார்கள். அங்ஙனமே கச்சியப்ப சிவாசாரியர் அரங்கேற்றுவாராயினார். காஞ்சித் திருநகரத்துள்ள ஆதிசைவர்கள் முதலானவர்களுக்கும் கந்தபுராணங்கேட்க வந்த எண்ணிறந்த அடியார்களுக்கும் போசனமுதலியவைகளெல்லாம் தொண்டைநாட்டுள்ள இருபத்துநான்கு கோட்டத்து வேளாளப் பிரபுக்களுடைய செலவினாலே நடந்தன. எல்லாரும் நியமமாக வந்து பேராசையோடு கேட்கக் கச்சியப்பசிவாசாரியர் தினந்தோறும் புராணம் வாசித்துப் பொருள் சொல்லி ஒரு வருஷத்திலே முடித்தருளினார்.

புராணமுற்றுப் பெற்றவுடனே கச்சியப்பசிவாசாரியர் புராணத் திருமுறையை விதிப்படி அருச்சனை செய்து நமஸ்கரித்தார். அப்பொழுது அங்குள்ள எத்திறத்தார்களும் அன்பினோடு விம்மிவிம்மித் தண்டாகாரமாக விழுந்து, கச்சியப்ப சிவாசாரியரை நமஸ்கரித்தெழுந்து இரண்டு கைகளுஞ் சிரசின் மேலேறிக்குவிய நின்று, துதித்தார்கள். கச்சியப்பசிவாசாரியர் கந்த புராணத் திருமுறையோடுந் தந்தச் சிவிகையில் எழுந்தருளி, இருபத்துநான்கு கோட்டத்துமுள்ள வேளாளப்பிரபுக்களுள்ளே சிலர் சிவிகை தாங்க, சிலர் வெண்சாமரம் வீச, சிலர் குடை கொடி பிடிக்க, நானாவித மங்கலவாத்தியவொலியினாலே திக்குகளெல்லாஞ் செவிடுபட, பிராமணர்கள் வேதகோஷஞ் செய்ய, சிவனடியார்கள் சரவணபவ சரவணபவ என்று சொல்லும் பேரொலி தழைக்க, திருநகரவாசிகள் திருவீதிகடோறுஞ் சுத்தி செய்து வாழைகள் நாட்டித் தோரணங்கள் நிரைத்துப் பூமாலைகள் தூக்கிப் பூரணகும்பங்கள் வைத்துப் பொரி தூவித் திருவிளக்கேற்றி அறுகெடுக்க, தமது அருமைத் திருமேனியிலே தரிக்கப்பட்ட திரிபுண்டரத்தின் அழகையும், உருத்திராக்ஷ மாலைகளின் அழகையும், சின்முத்திரையையும், திருக்கண்களினின்று பொழியும் பரமானந்தவாரியையும், அடியார்கள் கண்டு மனநெக்கு நெக்குருக வணங்கித் துதித்து ஆனந்தக்கூத்தாட, திருவீதிவலஞ்செய்து, குமரகோட்டச் சந்நிதியை அடைந்து,

சிவிகையினின்றும் இறங்கித் திருமுறையைத் திருக்கோயிலி னுள்ளே கொண்டுபோய்த் திருமுன்னே வைத்தருளினார். உடனே எல்லாரும் கச்சியப்ப சிவாசாரியரை, அவர் "அமையும் அமையும்" என்றவழியும் தவிராது, ஆராமையினாலே பாலகாலும் நமஸ்கரித்து, "பரம கருணாநிதியாகிய எம்பெருமான் தமிழ்நாட்டாரெல்லாரும் பிழைக்கும் பொருட்டுத் திருவாய் மலர்ந்தருளிய இப்புராணமாகிய திவ்வியாமிர்தத்தை அடியேங்கள் எஞ்செவிவாய் மடுத்து உய்ந்தனம் உய்ந்தனம்" என்று விண்ணப்பஞ் செய்து இன்பமுற்றார்கள்.

தமிழ்நாடெங்குமுள்ள சிவனடியார்களெல்லாரும், இக் கந்தபுராணத்தை மிகப்பாராட்டி, சிரத்தையோடு எழுதுவோரும், வாசிப்போரும், பொருள் சொல்வோரும், கேட்போருமாய், இதன் சொற்சுவை பொருட்சுவைகளை அநுபவித்துப் பேரானந்தப் பெருஞ்செல்வம் அடைந்தார்கள்.

பெருங்கருணைப் பிழம்பாகிய கச்சியப்பசிவாசாரியர் பின்னருஞ் சில காலம் குமரகோட்டத்தடிகளைப் பூசை பண்ணிக் கொண்டும் ஞானநிட்டை செய்துகொண்டும் இருந்து, அகண்டாகார நித்தி வியாபக சச்சிதானந்தப் பிழம்பாய் நின்ற சிவத்தோடும் இரண்டறக் கலந்தனர்.

இக்கந்தபுராணத்தை விதிப்படி மெய்யன்போடு நியமமாகக் கேட்பவர்கள், நோய்நீக்கம், செல்வம், புத்திரபாக்கியம், சத்துருஜயம், இராசவசியம் முதலிய பயன்களைத் தாந்தாம் வேண்டியவாறே பெறுவர்கள். இது நெடுங்காலம் பலராலும் அநுபவத்தினால் நிச்சயித்துணரப்பட்ட விஷயம். இது சத்தியம், சத்தியம், முக்காலுஞ் சத்தியம்.

வேலுமயிலுந்துணை



சைவப்பிரகாசப்பதிப்பகம் - யாழ்ப்பாணம்